# ஜவாஹிறுல் பவாயித்

இப்புஸ்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலாவின் திருநாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னா' என்னும் அழகிய 99 இஸ்முகளும், ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே தர்ஜுமாக்களும், தக்ஸிறுகளும், காஸியத்து களும், 2-வது 'அஸ்மாஉல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதி வந்ததும் ஷருஹை விட்டும் தனித்ததுமான 41 அஸ்மாக்களும் அவைகளில் வெளியாகும் அநேக கைபி யத்து, அஜாயிபு, மூஃஜிஸாத்து, அஸ்றாறு முதலான மட்டில்லாத பிரயோஜனங்களும், 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும் உயிர் பிராணிகளாகிய சகல ஜந்துக் களின் ஒவ்வொன்றின் குண குணங்களும், அவைகளின் அவயவமென்னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டா கும் பற்பல வியாதிகளுக்கு அவிழ்தங்களும், இன்னும் ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும், 4-வது மனாமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ்வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கும் விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும், 5-வது வைத்திய சுருக்கமென்னும் சகல வியாதிகளுக்கும் துட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களும் இருக்கின்றன.

இவற்றில் இஸ்முகளை மாத்திரம் போட்டோ பிளாக் மூலம் அரபியிலும் மற்றவையெல்லாம் சுத்தத் தமிழா லும் அச்சிட்டு பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 20–00

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 10, ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை 5.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபியுல்லா பேரில்

# றஸூல் மாலை,

முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில்

# மீரான் மாலை.

இதனை

காயற்பட்டணம் கல்விக்கடலாகிய

அல்ஆலிமுல் பாலில் வல்ஆரிபுல் காமில்

ஷிஹாபுத்தீன் ஷாம் ஙைனா லெப்பை

ஆலிம் ஸாஹிபு றஹிமஹுல்லா

அவர்களால் பாடப்பட்டது.

---

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

---

சுத்தப் பதிப்பு.

1980

## மஜ்மூஉஸ் ஸலவாத்து

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த துஆ கன்ஜுல் அர்ஷும், இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில் எப்போதும் சேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும் மற்றும் ஸலவாத்துக் கெல்லாம் நாயகமானதுமான உம்முஸ் ஸலவாத்தும், இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கவ்துஸ் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல்காதிரி ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் கவ்திய்யா ஸலவாத்தும், இன்னும் ஷெய்கினா குத்புல் அக்தாபு வகவ்துல் அஃபாபு ஜிந்தாஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் ஸலாத்துல் பாத்திஹா, ஸலாத்துல் காரிய்யா முதலிய ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாபு. சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிலேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 4-00

## மஜ்மூஉ மவ்லூது

இதில் றஸூலுல்லாஹ்வுடைய மௌலிதும், அதன் துஆக்களும், அந்த மௌலிதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மௌலிதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மௌலிதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யிதி, யாகுத்பா, யாஸெய்யிதி ஷைகி, மழை பைத்து, ஜுத்பிஹுத்பிக முனாஜாத்தும், பிஹுப்பி லையிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி அச்சிடப்பட்டு பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 3-20

ஷை 3 மௌலூதுகளும் அறபியில் பாக்கெட் ஸைஸ் கலிகோ பைண்டு விலை ரூ. 6-00

ஷை 3 மௌலூதுகளும் கீட்டு டிம்மி ஸைஸ் அறபியில் கலிகோ பைண்டு விலை ரூ. 9-00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 10, ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை 5.


بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# றஸூல் மாலை.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீமென் றுரைத்து
துஷ்மனைத் துராக்கி துய்யோனை யான் புகழ்வேன் 1

அல்ஹம்து லில்லாஹி ஆதிக்கெல் லாம்புகழும்
குல்ஆலமடங்கலையும் குறையன்றி கோர்வை செய்தோன் 2

உலகு பதினாலு மோராறிலே யமைத்த
நலவான நாயகனை நாள்தோறும் யான்புகழ்வேன் 3

அறுஷும் குருசும் அழகான லவ்ஹுகலம்
பறுகும் கடல்மலையும் படைத்தோனை யான்புகழ்வேன் 4

வானும் மலாயிகத்தும் வரிசைசுவர்க்க முந்நரகும்
மீனும்பொழுதும் இந்தும் வெளியாக்கியை புகழ்வேன் 5

கண்ணன்றி காண்பவனை காதன்றி கேட்பவனை
எண்ணி லடங்கானை எப்பொழுதும் யான் புகழ்வேன் 6

கெர்ப்ப குவளையில் கூர்விழியாய் செவிமூக்கு
ஒப்பான மேல்கரங்கா லுண்டாக்கியை புகழ்வேன் 7

அற்ப ஜலத்தாலே ஆணினமும் பெண்ணினமும்
நேர்ப்பாய் படைத்தோனை துய்தாக யான் புகழ்வேன் 8

உயிருள்ள கல்லுக்கெல்லாம் ஒன்றுபோல் தானிரணம்
கைரூகத் தான்கொடுக்கும் கத்தாவை யான்புகழ்வேன் 9

படைத் திங்களித்து பரிவாகப் பின்னெழுப்பி
பிடித்து மிருபதியில் புகுதிவிப்போனைப் புகழ்வேன் 10

முன்பில்ஒளி யாயிருந்த முஹம்மதுர் றஸூல் தனக்கு
பின்பு ஸலவாத்துரைப்பேன் பெரியோ னருளாலே 11

ஆதி பெரியோ னவர்க்காக ஆலமெல்லாம்
நீதியுடன் படைத்த நைனாரை யான்புகழ்வேன் 12

மயில்வேசமாய் மரத்தில் வல்லோனுடன் துதித்த
மயிலாய் வணங்கிநின்ற மஹ்றூதை யான்புகழ்வேன் 13

ஏழுவான் கடந்து மிறையோன் அறுஷு தன்னில்
நீள வசனஞ்செய்த நீதியுள்ளோரைப் புகழ்வேன் 14

மூத்தி லுதித்த முஹம்மதரை நித்தமும்யான்
மெத்தப் புகழ்வேனே விதிதோ னருளாலே 15

எல்லா நபிமார்க்கும் ஏத்தமாய் வந்துதித்த
மல்லார் முஹம்மதரை மனதில் மறவேனே 16

அப்துல்லா வெனும் அழகாம் அபூபக்கரை
அவதானமாய் புகழ்வேன் அல்லா அருளாலே 17

புவியில் நிகரில்லாப் புண்ணியரை எப்பொழுதும்
கவியாக யான்புகழ்வேன் கத்தா அருளாலே 18

ஜன்னத்து மானீரை துனியாவிலே புசித்த
மின்னத் துடையோரை மேவிப் புகழ்வேனே 19

ஆணினத் துக்கெல்லாம் அழகான தீன்வழியில்
பேணுதலாய் முந்தவந்த பெரியோரை யான்புகழ்வேன் 20

ஷைத்தான் நடுநடுங்கும் செம்மல் உமறுதனை
பைத்தாக யான்புகழ்வேன் வல்லா னருளாலே 21

சொல்மொழிக்கு நேராகத் துய்யகுரு னிறங்கும்
நல்உமறு கத்தாபை நாடி புகழ்வேனே 22

மானும் புலியும் மருவியொரு துறையில்
தானமாய் நின்றருந்தும் சங்கை உமறை புகழ்வேன் 23

ஹத்தால் மகனை கபறொடுங்க வாக்கிவைத்த
கத்தாபு மகன் உமறை கருத்தில் மறவேனே 24

இவர்க ளிருபேரும் ஈனமில்லா மக்கள் தம்மை
நபிக்குக் கலியாணஞ் செய்த நல்லமாம மார்காண் 25

நானூ றடிமைகளை நலமா யுரிமைசெய்த
ஆன உதுமானை அகத்தில் மறவேனே 26

உம்மூகுல்தூம் நாச்சியார் உக்துரு கய்யதுவை
செம்மை நிகாஹ் செய்த சீமானை யான்புகழ்வேன் 27

வானவர்கள் நாடிநிற்கும் வரிசை உதுமானை
ஊனமற எப்பொழுதும் ஓதிப் புகழ்வேனே 28



குர்ஆனை குறையில்லாமல் கோர்வைசெய்த கோயானை
ஓயாமல் நான் புகழ்வேன் ஒருவ னருளாலே 29

பாத்திமா நாச்சியாரைப் பரிவாய் நிகாஹுசெய்த
ஏத்தமுள்ள சேவுகரை ஏற்றிப் புகழ்வேனே 30

வான ஜிப்ராயீல் தன் வரவை அறிந்திருக்கும்
ஆன அலியாரை ஆதரித்து யான்புகழ்வேன் 31

இவர்க ளிருபேரும் இனிய நபிமக்களை
தவனமாய்க் கொண்டிருந்த சங்கை மருமகர்காண் 32

சிறிய தகப்பன் சிறப்பான அப்பாசை
கருதிப் புகழ்வேன் யான் கருணையுடையோ னருளால் 33

நபிக்குச் சிறியபிதா நல்லஹம்ஸா என்பவரை
கவிகட்டாய் யான் புகழ்வேன் காவலுடையோ னருளால் 34

படையில் புலிவீரர் பறந்துவெட்டும் ஜஃபறையும்
அடியேன் புகழ்வேன் அலிதமையர் தய்யாரை 35

இப்னு அப்பாசென்பவரை இப்னு உமறுதன்னை
இப்னு மஸ்ஊதை இனிதாய் புகழ்வேனே 36

அபுத்தர்தா என்பவரை ஆன அபுதர்றவரை
அபூகுஹறா பதையும் ஆதரித்து யான்புகழ்வேன் 37

அபூஹுறைறதையும் அனசுப்னு மாலிகையும்
அபூஉமா மதையும் அன்பாய் புகழ்வேனே 38

ஸல்மானை உம்மாறை சங்கை ஷுஐபுதன்னை
நல்ஜாபிறை சும்றதை நாடிப் புகழ்வேனே 39

ஹுதைபதென்னும் அவரை கிருபையாம் கதாததுவை
குத்ரீஎனு மவரைக் கொண்டாடி யான்புகழ்வேன் 40

அல்லா சலாமுரைத்த ஆறுவகை யார்கள்தம்மை
சொல்லால் புகழ்ச்சி செய்வேன் துய்யோ னருளாலே 41

[illegible]ஃது சஊதுதன்னை தல்ஹா சுபைறவரை
தகுதி அப்துர்றஹ்மானை சங்கைஜற்றாஹை புகழ்வேன் 42

நபிக்குமகன் போல்வளர்த்த நல்லசைது தம்மை
செவிசீனத் தாய்கேட்க செப்பிப் புகழ்வேனே 43

இவர்தன் மகனுரினிய உசாமத்துவை
கவனமாய் யான்புகழ்வேன் சங்கை புலியாரை 44

45. ஹஸ்ஸான் புதல்வர் தம்மை கனதிபிலா லென்பவரை
உஸ்ஸான வக்காசை யோதிப் புகழ்வேனே

46. யார்க ளடங்கலையும் அல்லா வருளாலே
சீராக போத்தல் செய்வேன் சிந்தைதனி லெப்பொழுதும்

47. பாத்திமா நாச்சியார் தம் பிள்ளைவயிற்றில் நனறும்
கோத்திரம் வாழப்பிறந்த ஹஸன்ஹ¤ஸைனை யான் புகழ்வேன்

48. கதீஜாவை சவ்தாவை ஹபுசாவை ஆயிஷத்தை
மதுரமுள்ள மாரிய்யத்தை வரிசைவும்மு சல்மாவை

49. உம்முஹபீபாவை யோசை மைமூனத்துவை
அம்மத்தென்னும் மாமிமகள் அழகான சைனபையும்

50. சபிய்யத்தென் னுமரை சங்கை சுவைரியத்தை
ஜபுயத்தில்லா சைனபையும் சீனத்தாய் யான்புகழ்வேன்

51. றைஹானத் தென்பவரை யினிதாய்ப் புகழ்வேனே
றைனில்லாப் பெண்டுகளை யெப்பொழுதும் யான்புகழ்வேன்

52. நபிதம் அவுலாதை நாட்டபாய் யான்புகழ்வேன்
பவனியுடையோர் மக்களை பாண்காய்ப் புகழ்வேன்

53. சைனபு நாச்சியாரை சித்தி றுகையாவை
சீனத்தும் முகுல்து}மை செப்பமாய் யான் புகழ்வேன்

54. மூவர்க்கிளையார் முகமழகாம் நாச்சியாரை
நாவால் புகழ்ச்சி செய்வேன் நல்மகளார் பாத்திமத்தை

55. பெண்ணினத் துக்கெல்லாம் பிரிசமுள்ள செய்யிதத்தை
கண்ணின் மணியைக் கருதிப் புகழ்வேனே

56. மணமான பொன்னு}ர்க்கு வாகாய் யெழுகையிலே
கனமான கூட்டமெல்லாங் கண் மூடும் நாச்சியர் காண்

57. தாஹிறையும் தையிபையும் தகுமான காஸிமையும்
பாகி ரிபுறாஹீமைப் பாங்காய்ப் புகழ்வேனே

58. ஹ¤ஸைனுடைய நல்மகனார் குணமான ஸைன் அலியை
திசையுடைய பாக்கிறையும் ஜ•பறையும் யான் புகழ்வேன்

59. மூஸபுனு ஜ•பரையும் முதமை ¦லியாரை
ஆசான அக்கரியை அன்னல்ஹஸனைப் புகழ்வேன்

60. உவைசுல் கறனீ தம்மை யோசை பசரியரை
தவசித் தனமுடைய சங்கைக்கும்யலைப் புகழ்வேன்

61. நு•மானை மாலிக்கியை நுன்மை முஹம்மதரை
நி•மான் அஹமதயும் நெஞ்சில் மறவேனே

62. சுபுயானை ஷைபானை சுறுதிபுனு தீனாரை
ஸபுயான தாஊதை ஷாஹ்உமறை யான்புகழ்வேன்

63. இபுறாஹீ மதுஹமையும் ஏற்றமுள்ள பல்கியையும்
தவனமாய் யெப்பொழுதும் சந்தோஷமாய்ப் புகழ்வேன்

64. பிஸ்த்தாமீ யென்பவரை மேலான ம•று¡பை
உஸ்தாது ஸிக்த்தீதனை ஓசைபிஷறைப் புகழ்வேன்

65. ஹல்லாஜெனு மவரை கனதி ஜுனை தவரை
நல்ல ஷிப்லீதனை ஓசைபிஷ்றைப் புகழ்வேன்

66. ஸஹலை நக்ஷபியை சங்கை யிபறாஹீமை

முகில்போல் ஷகீக்குதம்மை முயன்றுப் புகழ்வேனே

67. துன்னு}ன் மிசுரி தம்மை தய்ய அஜமீதன்னை
பின்பத்துஹு¤ மூஸிலியைப் பேணிப்புகழ்வேனே

68. வழிவெட்டி யாயிருந்த வள்ளல்புழையல் அயயாளை
ஒளியுடைய ஹாத்தமையு மோதிப் புகழ்வேனே

69. ஹம்து}னுல் கஸ்ஸாறைக் கனதி முபாறக்கினை
செம்மல் புனானீ தம்மை செய்குகவ்வாசைப் புகழ்வேன்

70. கத்தானி யென்பவரைக் கனதி அத்தா வென்பவரை
வித்தாற வாசித்தியை வீறாய்ப் புகழ்வேனே

71. ஷெய்கு புவைத்தீ தம்மை ஷெய்குமுசு னீதம்மை
வாகுடைய ஹற்மலத்தை வாழ்த்திப் புகழ்வேனே

72. நபியுல்லா போத்தல்செய்த நயினார் கஸ்ஸாலீ தம்மை
புவியில் நிகரில்லாத புண்ணியரை யான் புகழ்வேன்

73. கஸ்ஸாலி உஸ்த்தாது அப்துல் மலீக்கு தம்மை
உச்சாயமாய்ப் புகழ்வேன் ஒருவனருளாலே

74. ஷெய்கு ஷிராஸீ தம்மை ஷெய்குபுனு பவுறக்கையும்
மேகம்போல் கப்பாளை வீறாய்ப் புகழ்வேனே

75. ஷெய்கு ஜுவைனிதம்மை ஷைய்குக் குஷைரிதம்மை
ஷெய்குஸ் பறானீதம்மை சீராய்ப் புகழ்வேனே

76. ஜீலானி வாழவந்த ஷெய்குசுல்தான் மீராவை
செயலால் புகழ்ச்சிசெய்வேன் சீமா னருளாலே

ஸஹறுவர்தீ தம்மை துய்யஹம்மா தென்பவரை
தகுதியுள்ள ஹீத்தீதம்மை சங்கையாய் யான்புகழ்வேன் 77

அபூத்தாலி புல்மக்கியை ஆன கைலவியை
இபுனு அறபிதம்மை யேற்றிப் புகழ்வேனே 78

தாஜுத்தீ னென்பவரை சங்கை றபாயீ தம்மை
கோஜுபுனு பாறிஸையும் குஷியாய்ப் புகழ்வேனே 79

உதுமான் மூறாலத்தையும் ஓசையுள்ள அஃறபையும்
மூதுமான் அபூபக்கறை மோசமற நான் புகழ்வேன் 80

அதிய்யு முசாபிறையும் ஆன ஹக்காரியையும்
மதிபோல் வதனுடைய வள்ளல் அஸ்ஸாரைப் புகழ்வேன் 81

ஜவ்சகீ யென்பவரை ஷைய்கு அப்துர் றஹ்மானை
தவசி கழிபுல்பானை சங்கைஷுஜபைப் புகழ்வேன் 82

காலு தரீக்கிலுள்ள நல்லவலியாக்கள் தம்மை
மாலாசை கொண்டு மகிழ்ந்து புகழ்வேனே 83

நாபீயென்னும் காரீதம்மை நல்ல அபூ அம்றுதன்னை
ஷாபிபுனு ஆமிரையும் சாற்றிப் புகழ்வேனே 84

இபுனுக்குஸை யென்பவரை இல்முடைய ஆஸிமையும்
அவனுடைய ஹம்ஷத்தையும் அலிய்யுல் கிஸாவைப் புகழ்வேன் 85

ஹதீதுக் கிமாமான கருணை புகாரிதம்மை
மதாமுள்ள முஸ்லிமையும் பைஹக்கையும் யான் புகழ்வேன் 86

திருமதீ யென்னுமவரை துய்யசாயீ தம்மை
குருவான ஹாக்கிமையும் கொண்டாடி யான்புகழ்வேன் 87

தாறுகுத்னீ தம்மை நல்ல அபூதாஊதை
வீருடைய தைலமியை விரும்பிப் புகழ்வேனே 88

இமாம் றூபிஎன்பவரை யெஹ்யா நவாவீ தம்மை
ஹாமாமான ஷாதலிய்யைக் குணமாய்ப் புகழ்வேனே 89

ஷெய்குபுனு அல்வானை ஷெய்கு அபுல்கைதை
ஷெய்கு ஹழுறமியை ஸீனத்தாய் யான்புகழ்வேன்

சுல்தான் உலமாவை ஷெய்கு சுபுகீதம்மை
முல்த்தானில் போன மீறுபரீதைப் புகழ்வேன்

கறன்புல் மாமழைத்தக் கருணையுள்ள மீராவை
திறமாக நான் புகழ்வேன் திசையான ஷெய்குதம்மை



எழுவான் படுவானில் எங்கும் திசையான
அழகாம் பிறையான ஐதுறூசையும் புகழ்வேன் 93

ஷெய்கு இமாம் யாபி இயை ஷெய்குபுனு ஹஜறுதம்மை
ஷெய்குபுனு அல்லானை செப்பிப் புகழ்வேனே 94

முல்லா இபுறுஹீமை மேலாம் குசாயீதம்மை
சொல்லார் புகழ்ச்சிசெய்வேன் துய்யஇபுறுஹீம் ஹாவியை 95

சொன்னகரில் வந்துதித்தத் துய்ய அப்துல்லா மகனார்
அன்னமிடும் ஹுசைன் மைந்தனழகுகலன் தரைப்புகழ்வேன் 96

பெரியோரிவர் புதல்வர் போரான கான்ஷெய்கை
எரியனுகா ரிவர்பாலர் இலங்கும சதகை புகழ்வேன் 97

அந்திமதி போலிவர்தன் அழகுகுமாரர் ஸுலைமான்
வந்துதித்தார் பட்டணத்தில் வாழ்வையுடனே யிருந்தார் 98

ஷெய்குமது பூலிதம்மை ஷெய்கு ஸக்கரிய்யாவை
ஷெய்கு அலி கவ்வாலை சிறப்பாய் புகழ்வேனே 99

ஷெய்கு அப்துல்வஹ்ஹாபை ஷெய்குறமலீ தம்மை
ஷெய்க புழறுத்தீனைச் சிப்பமாய் யான்புகழ்வேன் 100

வங்காளம் சீனம் மலாக்காபறு அறபு
எங்கும் திசையான மதியெங்கள் பிதாவைப் புகழ்வேன் 101

ஷெய்கு சுலைமானைச் செப்பமாய் யான்புகழ்வேன்
வாகா யவர்மக்களை வாழ்த்திப் புகழ்வேனே 102

அலைபோ லறிவுடைய அண்ணல் ஷம்சுத்தீனை
நிலையால் புகழ்ச்சி செய்வேன் நைனாரை எப்பொழுதும் 103

மலைபோல் கலையுடைய வள்ள லஹ்மதரை
துலையாப் புகழ்ச்சிசெய்வேன் துய்யஎங்கள் உஸ்தாதை 104

மக்கம் மதீனமெங்கும் வகாய்ச் திசையுடைய
மிக்க சதக்கத்துல்லாவை மிகுதியாய் யான் புகழ்வேன் 105

வரிசை மிகுதியுள்ள வள்ளல் சதகத்துல்லாவை
[illegible]சையாய் சாமென்பவன் ஓதிப் புகழ்வேனே 106

பிக்தி றிவுக் கடலான ஆனஸலா ஹுத்தீனை
சந்தி றமாய்ப் புகழ்ச்சிசெய்வேன் சின்ன அகியானவரை 107

தகப் ன்னங் கொடுத்து மழகாங் கலைகொடுத்தும்
உகப் ன்னுங்கலை யோதிவிக்கும் வீருடையோரைப் புகழ்வேனே 108

ஷெய்கு அப்துல் காதிரென்னும் கின்னரு லப்பைதம்மை
ஜாஹுடைய ஷெய்குதன்னைச் சாற்றிப் புகழ்வேனே 109

கடலில் நடந்துவந்த கருணை உதுமான்லப்பை
தொடராய்ப் புகழ்ச்சிசெய்வேன் துய்யஉதுமான் ஷெய்கை 110

காயில் நகரிலுள்ள கருணைஉல மாக்கள் தம்மை
வாயால் புகழ்ச்சிசெய்வேன் வல்லா னருளாலே 111

துன்யாவி லுண்டான துய்யநல்ல பேர்கள் தம்மை
தனியாக நான்புகழ்வேன் கர்த்தா வருளாலே 112

இவர்கள் பறக்கத்தினால் எங்கள் நபிதமக்கு
நவமணிபோ லிம்மாலை நாடிப் புகழ்வேனே 113

நாட்டமுட னிம்மாலை நாடி யுரைப்பவருக்கும்
கூட்டமாய் கேட்பவர்க்கும் கோதாரி வாராது 114

நாளை மஹ்ஷரிலே நையினார்க் கொடிக்கீழே
சூழும் பலாயைவிட்டும் துய்தாகக் கூடிநிற்பார் 115

மறுமைதனில் மன்றாட்டு வாகா யிவர்க்கவரும்
கறம்மிகுதி யுண்டாகும் கபுறு மணவரையில் 116

வரிசைமானென்று விண்ணார் வாகா யுரைப்பார்கள்
பிரிசமாய் பொன்னார்க்கு போவான் பிறைபோலே 117

கல்கில் நிகரில்லாத கருணை நைனாருடைய
துலக்கமாம் காரியத்தைச் சொல்லுகிறேன் கேட்டிருங்கள் 118

ஆதியவ்வலில் படைத்தான் அஹ்மது றசூலொளிவை
நீதியுடன் பின் படைத்தான் நீளருஷு லவ்ஹுகலம் 119

ஆதம் வெளியாக ஐம்பது அல் பாண்டுக்கு முன்
நீதமுடை யோரொளிவு மிறையோனை ஹம்து செய்யும் 120

சாதி வர்க்க மெல்லாம் தருமான நன்னபிக்காய்
ஆதி பெரியோ னமைத்தான்காண் அவ்வலிலே 121

வானும் அறுஷும் வரிசை குறுசும் கலமும்
மீனும் பொழுதும் இந்தும் வீருடை யோர்க்காய்ப் படைத்தான்

சொர்க்கத் தலங்கார மெல்லாம் துய்ய நபிக்காக
ஹக்கான நாயகர் தான் கருணையுடனே யமைத்தான் 123

புதுமைக் கடலேழும் புதுமை மலையாறும்
ஹபீபு நபிக்காக ககனுடையோன் தானமைத்தான் 124



ஜிபுறயீல் மீக்காயீல் ஸூறாதும் இஸ்றாபீல்
சபுறு நபிக்காக தம்பிரான் தான் படைத்தான் 125

அறுஷு குறுசில் அழகுலவ்ஹு வானேழில்
வரிசை முஹம்மதென வடிவாய் யெழுதிருக்கும் 126

சுவர்க்க மடங்கலும் துய்ய நபி நாயகம்
துவர்க்கமுடை யோனருளால் துய்தாய் யெழுதி வைத்தான் 127

வானவர்கள் நெற்றிதனில் வள்ளல் நபிநாமம்
ஸீனத்தாகத் துலங்கி சீராக நின்றிலங்கும் 128

ஒளிவாய்ப் புகழ்ந்து நின்றார் ஒன்றான ராஜாவை
வெளியாக வில்லையப்பள் மேலான ஆதம் நபீ 129

மயில்வேசமாய் மரத்தில் வல்லோன் றனைத்துதித்து
கைவில்லா அன்றளவும் கத்தாவைத் தான் புகன்றார் 130

ஒளிவினால் கிந்தீலில் ஒன்றான நாயகனை
அளவில்லா காலமெல்லாம் ஆசாரமாய்த் துதித்தார் 131

அற்வாஹெல்லா மிவர்தன் அழகான றூஹு தன்னை
செரிவாக சூழ்ந்து நின்று ஸீனத்துடனே புகழும் 132

தம்பிரான் நூறால் சமைந் தெழுந்த நூறாலே
உம்பர் நபிமார்கள் உலகமெல்லா முண்டாச்சு 133

ஆதம் நபியை யழகாய் படைத்த பின்பு
ஆதியவ ரொளிவை யமைத்தான் அவர் நுதலில் 134

நெற்றி தனி லொளிவு நில்லாதிருக்கில் உம்பர்
பத்திபத்தியா யவர்க்கு பணிந்து சுஜூது செய்தார் 135

ஆதம் நபிக்குப் பின்பு அழகாய்த் துலங்கி நின்றார்
சீது நபியுடைய சீனத்துள்ள நெற்றிதனில் 136

அனூஷி தன்னுதலில் அழகாம் பிறை போல
மனுவெல்லாம் தாழ்ச்சி செய்து வடிவா யிலங்கி நின்றார் 137

கைனா னென்று மவர்தன் ககனமதி போல் நுதலில்
ஜனான கண் பார்க்க அம்புலி போல் நின்றுதித்தார் 138

வரிசை மிகுதியுள்ள மஹ்லீலின் நெற்றிதனில்
துரிதாக நின்றுதித்தார் துய்ய ஒளியாய்த் துலங்கி 139

பாரிதென்னு மவர்தன் வாகுடனே நெற்றிதனில்
சீராக நின்றுதித்தார் சீமான் முஹம்மதனார் 140

உகுனூகு நெற்றிதனில் ஒளிவு வந்த காரணத்தால்
மவுனமுள்ள பேர்க ளெல்லாம் வாகாய் யடிபணிவார் 141

மத்தூஸல் யெனுமவர் தன் வரிசையுள்ள நெற்றிதனில்
கதிரோனொளியாகக் கண் விழியில் நின்றுதித்தார் 142

நூஹூ நபீ னுதலின் நூறாக நின்றுதித்தார்
ஜாஹூடைய சாமளவில் சந்திரன் போல் நின்றுதித்தார் 143

அற்பகுஷ தென்பவர்பால் அஹ்மதி றசூலொலிவு
குறியாக நின்றிலங்கி குறையாமல நின்றது காண் 144

பின்பு ஜபர் தன்னுதலில் பிறையொளி போல் நின்றிலங்கி
அன்பான சாலிகுதன் ஜனநுதலின் வந்தது காண் 145

காலி என்னும் பேருடையோர் ககனமதி போல் நுதலில்
சாலி ஹாய் நின்றுதித்தார் தம்பிரான் தன்னருளால் 146

ஆமிரென்று மவர்தன் அழகான நெற்றிதனில்
ஷாமிலாய் நின்றுதித்தார் தக்கோ னருளாலே 147

அற்உவா நெற்றிதனில் அழகான அம்புலி போல்
கிருபை யுடையோரொளிவுக் கீர்த்தியாய் நின்றது காண் 148

நாஹூறென்னு மவர்தன் நல்ல ஜபீன் நெற்றிதனில்
ஜாஹூடையோர் தம்மொளிவு சந்திரன் போல் நின்றது காண் 149

தாறகு நெற்றிதனில் சங்கையுடை யோரொளிவு
றாறுனச் சூரியன் போல் றாறுமல் நின்றது காண் 150

வரிசை யிபுறாஹீம் நபீ வாகான நெற்றிதனில்
பரிசுபெற நின்றது காண் பாறமதி போலே 151

இசுமாயீல் பைகாம்பர் இது போல் நெற்றிதனில்
பிசகாமல் நின்றிலங்கும் பெருமான் நபி யொளிவு 152

உத்தென்பவர் நுதலில் ஒளிவாக நின்றிலங்கி
அதுனானென்னும் மவர்பால் ஆதித்தன் போலுதித்தார் 153

வள்ளல் மூஅத்துடைய வாகான நெற்றிதனில்
தெள்ளிய நூறாக ஸீனத்தாய் நின்றுதுதித்தார் 154

நிஸாறுடைய நெற்றிதனில் நேசமாய் நின்றிலங்கி
விசார மிகுதியுள்ள மூனர்ஹபீனில் வந்துதித்தார் 155

இல்யாசு நெற்றிதனில் இந்து போல் நின்றிலங்கி
நல்ல முதுறகத்தை நாடிஒளி வந்தது காண் 156



குஸைமத்து நெற்றிதனில் கோஜா ஒளிவு நின்று
திசையான் கினானத்து பால் செப்பமாய் வந்தது காண் 157

நல்லநுழர் நெற்றியில் நன்றாய் யிலங்கிய பின்
மல்லார் புயத்தாசர் மாலிக்கு பால் வந்தது காண் 158

பிஹ்ரென்பவர் நெற்றியில் பிசகாமல் நின்றிலங்கி
பகுறுடைய காலிபு பால் பருதி யொளியாக வந்தார் 159

சங்கை லுவை நுதலில் சாக்தொளிபோல் நின்றிலங்கி
சங்கைக் கவுபளவில் ஸீனத்தாய் வந்தது காண் 160

மூர்றத்தெனு மவர்தன் முகமழகாம் நெற்றிதனில்
பர்றுனவ ரொளிவு வடிவாக நின்றது காண் 161

கிலாபு நுதலில் கெரினனு போலிலங்கி
கிலாவாக நின்றுதித்தார் நயினார் முஹம்மதனார் 162

குசையென்பவர் நுதலின் ஹூஸ்னாக நின்றிலங்கி
அசையா மணியுடைய அண்ணல்பக்கல் வந்ததுகாண் 163

அப்துமுனா பென்னும் அவர்நுதலை விட்டேகி
அவதானமாய் ஹாஷீம் அண்ணல்பக்கல் வந்ததுகாண் 164

கனதி அப்துல்முத்தலிபின் ககன்பிறைபோல் நெற்றிதனில்
மனிதரெல்லாங் கொண்டாட வரிசையாய் நின்றுதித்தார் 165

அண்ணல் அப்துல்லாநெற்றியில் அழகான அம்புலிபோல்
திண்ணமுடன் நின்றுதித்தார் சுல்தான் முஹம்மதனார் 166

ஷாமூறு மன்னன்மகள் சங்கையுள்ள நூறைக்கண்டு
ஆமெனவே பாடுபட்டாள் அப்துல்லா மாட்டேனென்றார் 167

வஹபுமகள் ஆமினத்தை வல்லோ னருளாலே
உகப்பாய் நிகாஹுசெய்து ஒளிவை யிறக்கிவைத்தார் 168

ஆமினாச் சொல்லுகிறார் அஹ்மதை யுண்டானபின்பு
பூமியில் பெண்போல பெண்வருத்தம் நான்காணேன் 169

ஆகிலும் மாதவிடை யமைந்தபடியாலே
ய்ப் புதுமைபட்டு வாவறியாதே யிருந்தேன் 170

பிக்தி துக்கத்தில் ஒருவர் கனதியுடன் வந்துசொன்னார்
சக்திர ணமுள்ள ஆண்டவரை செப்பமாய் நீ சுமந்தாய் 171

தகப்ப பியபின் னானிந்தே சுமந்தது பிள்ளையென
உகப்ப பாக வந்துசொன்னார் திங்கட் கிழமையிலே 172

மாதம் முறை முறையே மாதாவின் வாசலிலே
நீதி அன்பி யாக்கள்வந்து நெறியாய் கனவில் சொல்வார் 173

முன்மாதம் வந்தார் முறைமையுள்ள ஆதம்நபீ
பின்மாதம் வந்தோர் பெரிய இதுரீசுநபீ 174

மூன்றும் பிறையில்வந்தார் மேலான நூஹுநபீ
மீன்ற பிறையில்வந்தார் வீரர் இபுறூஹீம் 175

அஞ்சாம் பிறையில் வந்தார் ஆன இஸ்மாஈல்நபி
மஞ்சுக் குடையாகவந்த வள்ளல்நபீ தாயளவில் 176

ஆறும் பிறையில்வந்தார் அண்ணல் மூஸாநபிதான்
வீரான ஆமினத்தின் வீடுதலை வாசலிலே 177

ஏழாம் பிறையில்வந்தா ரீனமில்லா தாவூது
ஆளான மன்னர் அஹ்மது தாயாரளவில் 178

எட்டாம் பிறையில் வந்தார் எங்கள் நபி தாயளவில்
துட்டர் தனையடக்கும் ஸுலைமான் நன்னபிதான் 179

மாதம் ஒன்பதானபின்பு மறியம்மகனார் ஈசா
காதம் மணக்கவந்தார் காவல்நபி தாயளவில் 180

வயிற்றில் லிருக்கையிலே வாகாய்ச் சிலபுதுமை
ஆய்ந்தங் கறிந்தார் அவர்தாயா ராமினத்து 181

ஆனைவருஷம் அஹ்மதுர் றசூல் பிறந்தார்
ஈனமில்லா மக்கமெனும் இனியநகரில் பிறந்தார் 182

சபாவும் மற்வாவும் சங்கை அறபாமலையும்
சிபாயென்ற ஸம்ஸமுள்ள சிறப்பான நன்நகர்காண் 183

ஹறமும் கஃபாவும் கனதியுள்ள மாளிகையும்
கறமிகுதி யுள்ள தனத்தோர்கள் ஊரிதுகாண் 184

றபீவுல் அவ்வல்மாதம் இருநான்கு தாமினுலே
ஹபீபிறசூல் பிறந்தார் ககனபிறை போலே 185

ரண்டிலென்றும் நாலிலென்றும் நல்ல பனிரண்டிலென்றும்
வென்றியுள்ள பத்திலென்றும் வீருடையோர் செப்பினர்கள் 186

திங்கட்கிழமை சுபுஹுவக்த்தில் நபியிறசூல்
தங்கம் நிறமாக சங்கையுடனே பிறந்தார் 187

நபிபிறந்த நாளையிலே நால்மூன்று அல்புவெண்ணி
புவியில் வெளியாக்கிவித்தான் புற்கான் மிறக்கினவன் 188



வானும் புவிஎழும் வாகா யொளிவாக
ஷீனத்தாய் நின்றதுகாண் சுல்தான் பிறந்த அன்று 189

ஷாமு பதியி லுள்ள சங்கையுள்ள மாளிகையை
ஆமினத்து நாச்சியர்தான் அவ்வொளியால் கண்டனர்காண் 190

கிஸ்ராவெனும் மனுக்கு கோட்டைகள் கொம்மையெல்லாம்
கஸ்றூக துண்டுதுண்டாய் கீறி விழுந்ததுகாண் 191

பாரிஸென்னும் ஊரில் பார நெருப்பனையும்
நேரிசாய் நூந்ததுகாண் நைனார் பிறந்த அன்று 192

சாவதெனு மூரில் சங்கையுள்ள கெங்கைகசம்
மாதற்றி போச்சுதுகாண் வள்ளல் பிறந்தஅன்று 193

வத்தி வாண்டிருந்த வாதீசமா வதுதான்
நத்திவெள்ளம் வந்ததுகாண் சங்கை பிறந்த அன்று 194

சாஸ்திரக் காரருட சங்கையுள்ள கோபுரங்கள்
ஏத்தமுடை யோர்ப்பிறக்க இடிந்து விழுந்ததுகாண் 195

நஸ்றூனி மாமரங்கள் நைனார்ப் பிறந்த அன்று
கஸ்ரா முறிந்தது காண் கத்தா வருளாலே 196

அஸ்னாமு புத்துகான்கள் அண்ணல் பிறந்த அன்று
அசைந்து தலைகிழா யடித்து விழுந்ததுகாண் 197

ஷைத்தான் ககனிழந்தான் சுல்தான் பிறந்தஅன்று
பயித்தியங் கொண்டவன்போல் பதறிதிகைத்திருந்தான் 198

இபுலீசெனும் ஷைத்தான் இனிப்பான சேவுகர்க்கு
கவலுவான் நீங்கள்சென்று காரியமேதுச் சொல்லுங்கள் 199

எங்கும் திரிந்தவர்கள் ஏகிவந்தார் மக்கம்தனில்
அங்கே ஓரொளிவு ஆமீனார் வீட்டில்கண்டான் 200

அப்போ தவர்கள்வந்து அஸாஸீலுடன் வுரைப்பார்
செப்பமாய் சென்றுவந்தோம் செகத்திலொன்றும் கண்டோமில்லை

மக்கமெனும் நகரில் வாகாய் யோரொளிவு
தொக்கமாய் நிற்குதுகாண் தூண்போலே வானளவும் 202

த்திவங்சளம்தன்னை இபுலீசு கேட்டளவில்
த்திரன்ங் கழுதவனும் நோக்காடு பட்டிருந்தான் 203

கப்பர்யாய்வீழ்ந்து உச்சந்தலையில் மண்ணை
கப்பரமாய் போட்டறைந்து விம்மிவிழுந்தான் தரையில் 204

கெட்டோ மழிந்தோமே குறைமிகுதி பட்டோமே
எட்டுத் திசையுங்கேட்க இபுலீ சழுதிருந்தான் 205

நக்ஷத்திரங்கள் நபிபிறந்த நாளையிலே
உச்சத்தி லிருந்து உதிர்ந்து விழுந்ததுகாண் 206

ஜிப்ராயீல் மீக்காயீல் துய்ய மலாயிக்குகள்
சபுறுன நன்னபியை சங்கையுடன் சூழ்ந்துநின்றார் 207

ஷைத்தான்கள் வாராமல் தீங்கர்கண்கள் தையாமல்
பைத்தான வீடுதனில் வளைந்தவர்கள் நின்றார்கள் 208

எட்டு சுவர்க்கத்திலும் ஏழுதட்டு வானத்திலும்
பட்டுத்துயிலில்வைத்து பாங்காக சுற்றினர்கள் 209

சுற்றி மூழிக்குமுதல் துய்யநபி தாயளவில்
பத்தி பத்தியாகவந்து பாங்காக விட்டனர்கள் 210

சுவர்க்கத்து வல்லிகளும் துய்யபின்து இம்றானும்
சுவர்க்கத்து ஆசியத்தும் சோமம்போல் வந்தனர்கள் 211

மார்க்கம் செய்து மையெழுதி வாகா யபமறைத்து
பார்க்க சுஜூது பருதியொளி போலுதித்தார் 212

தொப்பு ளழுகாயறுத்துத் தய்யமணமான எண்ணை
தப்பிதலை மேனியெல்லாம் சந்திரன்போல் வந்துதித்தார் 213

காரிருள்போல் முடியும் ககன்பிறைபோல் முகமும்
நேரான புருவமுள்ள நீள்நுதலுமாய்ப் பிறந்தார் 214

வெள்ளி மடல்போல் காதும் விழிமாணிக்கம்போலும்
வள்ளி கிளிமூக்கும் வார்ந்த கனன்மாய்ப் பிறந்தார் 215

மோதிரம் போல் வாயும் முருவல் முத்துபோ லொளியாய்
நீதமுள்ள பொற்கெண்டிபோல் நீள்கழுத்து மாய்ப்பிறந்தார் 216

தின்னமுள்ள தோள்புயமும் சிறப்பான மாரழகும்
மண்ணில் நிகரில்லா முஹம்மதுர் றசூல்பிறந்தார் 217

எல்லா அழகும் இவரழகில் பாதியென
நல்ல உலமாக்கள் நவின்றங் குரைத்தனர்காண் 218

மனுவா லிவர்வசுபு வன்னிக்கக்கூடாது
சனுவா யுலகுக்கெல்லாம் சங்கையாய் வந்தனர்காண் 219

சாஹசெனும் சோபனம் தரையில் தொனியாய் முழங்கும்
தாஹசெனும் மிறசூல் தரையில் பிறந்தாரெனவே 220



மேலோர் பிறந்த அன்று விண்ணவரும் மண்ணவரும்
மாலாசை கொண்டு மகிழ்ந்து புகழ்ந்தனர்கள் 221

அறுஷும் குறுசும் அழகான லவ்ஹுகலம்
பருசும் கடல்மலையும் பாரநபியைப் புகழும் 222

கானகத்தி லுண்டான காடிபுலி பீல்கடுவாய்
மானும் மறைமுயலும் வள்ளல் நபியைப் புகழும் 223

அன்னமும் தாருவும் ஆனகிளி நன்கனமும்
மன்னர் பிறந்தாரெனவே வனத்தில் வண்ணமாய் கூவும் 224

மயிலும் குயிலும் வனத்தில் புறாயினமும்
மயலாசை கொண்டு மகிழ்ந்து தினங்கூவும் 225

ஜன்னத்தடங்களையும் திறந்தங் கலங்கரிக்க
மின்னத்துடைய அல்லா விடுத்தான் மலாயிகத்தை 226

நரகமெல்லாம் பூட்டுண்டது நைனார் பிறந்த அன்று
உறமிகுதி யுள்ளவன் தன் உத்தாற பரிமாணன் 227

வல்ல பெரியவனும் வாகாத் திறைநீக்கி
நல்லாற் பிறந்த அன்று நலவாகத் தோத்தல் செய்தான் 228

வானவரும் ஹூறுல்ஈனும் வஹசும் இறைப்பக்கவில்
தானமாய்க் கேட்டனர்கள் சங்கையாசை வளர்க்க 229

அப்போதிறைவன் அமத்தி செப்பினான் அமதீ
செப்பமுடன் வளர்ப்பாள் துய்யஹலீமா வென்பவள் 230

ஸஃதுக் கிளையிலுள்ள சங்கை ஹலீமா முலையை
மகுண முடையோர் குடித்தவரலா ரினைகேளாய் 231

பஞ்சம் பிடித்ததினால் பரிவாய் புருஷருடன்
அஞ்செட்டு காரியர்கள் ஆனமக்கம் தேடி வந்தார் 232

மக்கமெனும் நகரில் வாழ்வுடையோர் தங்களுட
மக்கள் தனை யெடுத்தார் வாகாம் முலைகொடுக்க 233

வரிசை ஹலீமாவும் வாழும் கணவனுமாய்
ரிசபரி பிந்தினர்கள் பாரப்பசியால் மெலிந்து 234

ந்திவந்து கேட்டார்கள் பேர் அப்துல் முத்தலிபை
ந்திரன் போல் முகத்தார் சங்கையுடனே யுரைத்தார் 235

ப்பர் மவுத்தான சங்கையுள்ள பிள்ளையர்க்கு
ப்பாய் முலைகொடுத்தா லுதவிமிக உண்டாகும் 236

ஹலீமாவும் மாப்பிள்ளையும் நபியைத்தேடி
பிலமாக வந்தனர்கள் பிள்ளைதனைப் பார்க்கவென்று 237

பார்த்துத் திகைத்தார்கள் பருதியோ இந்தொளியோ
ஏற்றிப் புகழ்ந்தார்கள் இவரழகைக் கண்டபின்பு 238

கண்டு களிகூர்ந்து கருத்தாய் முலைகொடுத்து
வெற்றியுடை யோரைக்கொண்டு வீராய் நடந்தனர்கள் 239

எல்லாருக்கு முன்பாக ஏகும் அவர்களுந்தான்
சொல்வார்கள் தோழியர்கள் சொல்லா இதேதெனவே 240

அப்பள் ஹலீமா அவர்களுடனே யுரைப்பார்
மெய்ப்பான பிள்ளையினால் மிகுதி புதுமைகொண்டோம் 241

ஸஃதுக் கிளையிலுள்ள சங்கை ஹலீமாமுலையை
மருணமுடைய முஹம்மதுர் றசூல் குடித்தார் 242

வாகாய் அவர்முலையை வள்ளல் குடித்தபின்பு
சூழை முலைமாறி சுறந்ததுகாண் பாலாக 243

கல்லும் மரமும் கைரான பிள்ளையென்று
நல்ல சலாமுறைக்கும் நாங்கள் கொண்டுப் போகையிலே 244

பட்டமரங்க ளெல்லாம் பச்சைமரமாய் பழுக்கும்
துட்ட மிருகமெல்லாம் துய்ய சலாமுரைக்கும் 245

ஹலீமா வளவிலுள்ள கருவழிந்த ஆட்டினங்கள்
மலீஹாய்ப் பருத்ததுகாண் வள்ளல் வரிசையினால் 246

குட்டங்குறை நோயுள்ளவர் குதாநபியைத் தொட்டிருந்தால்
கெட்டபலாய் நீங்கும் கிருபையுடையோ னருளால் 247

வந்துவந்துப் பார்ப்பார்கள் பலதிலுள்ளோ ரெல்லாம்
சந்திரனோ சூரியனோ தங்கமோ யென்று சொல்வார் 248

சிற்றூரி லுள்ளவர்கள் திசைகேட்டு தீபரமாய்ப்
பத்திபத்தியாய் வருவார் பயஹாம்பரைப் பார்க்க 249

வந்தவர்க ளெல்லாம் மதிபார்த் துரைப்பார்கள்
அந்த மிவர்போல் அழகரில்லை யம்புவியில் 250

திகைத்து மதிமயங்கி தீன்குடிப்புத் தானிழந்து
முகத்தை யுற்றுப்பார்த்து நிற்பார் பீவி ஹலீமாவளவில் 251

அஹமதிரசூல் பொருட்டா லவ்வூரெல்லா மலிந்து
சுகமாக வாண்டனர்கள் துய்யோன் பறக்கத்தினால் 252



மழையில்லாக் காலந்தனில் வரிசையுள்ளோர் தம்மைவைத்து
மொழிவாரிவர் பொருட்டால் முன்னவனே நீயிறக்காய் 253

அப்போது மேகம் அறைந்து இடிமுழங்கி
தப்பாமலே சொரியும் சாடிவாய் போலாக 254

ஹலீமா உரைக்கிறார் கருணை முஹம்மதனார்
மலீஹாய் வலதுமுலை வருந்தி யருந்துவர்காண் 255

இடதுமுலை யருந்தார் எங்கள் நைனாரிறசூல்
உடனான ழம்றத்துக்காய் யுறுதிநெறியாய் விடுவார் 256

திரண்ட மதிமுகத்தார் சிறாஜு விளக்கில்லாமல்
இரண்ட இரவில் இருந்தோ மிவரொளியில் 257

தாராட்டி சீராட்டி சங்கையாய் நீராட்டி
பாராட்டி பால் பூட்டி பாங்காய் வளர்த்தனர்காண் 258

நடக்கப் பருவம் நபீயிறஸூ லானபின்பு
கடக்கணம் மேய்க்கவென்று காவலுட னேகினர்காண் 259

அப்போது மூவர்வந்து அஹ்மதுதன் நெஞ்சுதனை
செப்பமாய்க் கீறிகல்பைத் துய்தாய்க் கழுகினர்காண் 260

ஒப்பமாய் பின்பு நெஞ்சை யொன்றாய்ப் பொருத்தினர்கள்
ஒப்புகமை யில்லா வுடையோ னருளாலே 261

ழம்றத்தென்னும் பிள்ளையிதை நன்றாகக் கண்டளவில்
உம்மளவில் சென்றோடி யுரைத்தா ரிதுகருமம் 262

அப்போ தவரழுது அஹ்மதனை வந்தெடுத்து
செப்புமகனே யுனக்கு தீங்கேது என்றுரைத்தார் 263

தாயாருடனுரைப்பார் சங்கையாய் மூவர்வந்து
நாயனருளால் சதுறை நன்றாகக் கீறினர்கள் 264

கல்பை பிளந்து கழுவிப் பொருத்தியபின்
நில்லாம லேகினர்கள் நீதியுள்ள மாதாவே 265

பின்பு சிலகாலம் பெருமான் வளர்ந்தபின்பு
முன்பான பேரர்பக்கல் அஹ்மதரைக் கொண்டுவந்தார் 266

பேரர் அப்துல் முத்தலிபும் பிரிசமாய் முத்திக்கொண்டு
பேராம் ஹலீமாக்கு பொன்பூ மிக அளித்தார் 267

இருந்து வளர்ந்த இயல்பெல்லாம் பேரருக்கு
திருந்த உரைத்தனர்காண் சுல்தானுடன் காரியங்கள் 268

ஆடையும் பொன்னும் அழகான மாடமும்
கேடும் பொருளெல்லாம் திரண்டதுகாண் தீன்நபியால் 269

நயினார் முஹம்மதனார் நெறியும் ஒழுக்கத்திலும்
ஸைனுகத் தாம்வளர்ந்தார் ஷீனத்துள்ள பேரர்பக்கல் 270

பொய்யுரைகள் பேசாமல் பொல்லாங் கணுகாமல்
மெய்யான தீன்வழியில் வீராய் வளர்ந்தனர்காண் 271

குபுறுஷிர்க்கு செய்யாமல் குளிகேட்டி லாகாமல்
நபருடைய பேரர்பக்கல் நன்றாய் வளர்ந்தனர்காண் 272

விசுவாசி யென்றிவரை வீரான பட்டஞ்சொல்லி
பிசகாமல் சொல்வார்கள் பெரியோர்க ளாசரித்து 273

வயிற்றில் ஒருமாதம் வள்ளல் இருக்கையிலே
சைத்தியமாக செத்தார் தகப்பர் அப்துல்லாதான் 274

மதீனமெனு மூரில் வரிசைநபித் தகப்பர்
மதிபோல் முகமுடனே மண்ணில் ஒடுங்கினர்காண் 275

நாலுவயதில் நபீ தாயார் ஆமினத்து
காலம் நிரம்பி கபுறும் வாயிற்புகுந்தார் 276

இருநான்குச் சென்றபின்பு இனிய அப்துல்முத்தலிபும்
கருணையுடையோனருளால் கபுரில் ஒடுங்கினர்காண் 277

பின்பு அபூதாலிபுதான் பிரிசமாய் நன்னபியை
அன்பாய் வளர்த்தனர் காண் அம்புலிபோல் நின்றிலங்கி 278

ஆம் பனிரண்டானபின்பு ஆன அபூத் தாலிபவர்
ஷாமூர்க்குப் போகவென்று சங்கையுடன் கொண்டெழுந்தார் 279

கொண்டு வழிப்போகையிலே கூண்டுசலாம் சொல்லிவிழும்
கண்டகற்களும் மாமும்கருணை நயினார்தமக்கு 280

புஸ்றாவென்னும் நகரின் புஹைறாவு றூஹிபுதான்
குஷியாக முத்திரையும் குறிபலனுங் கண்டதினால் 281

அலாமத்து கண்டு அஹ்மதரைத் தானறிந்து
குலாவுடைய அம்முடனே கூறினார் பாதிரியார் 282

ஷாமூர்க் கிவரைக் கொண்டு சபர் செய்யலாகாது
சூமி யெஹூதியர்கள் துன்மார்க்கஞ் செய்வார்கள் 283

மீள வருகையிலே வீருடைய அம்முடனே
மீளவிட்டு வந்தது காண் நீள்மேகம் நன்னபிக்கு 284



வந்தார் முஹம்மதனார் மக்கமெனும் நகரில்
சிந்தை மகிழ்ந்திருந்தார் துய்யஅம்மு பக்கலிலே 285

மக்கத்தி லுள்ளவர்கள் வாகாய் சிறியாரை
பக்கத்தில் மல்மிடிக்க பார்த்து மகிழ்ந்திருப்பார் 286

அஹமதி றசூலும் அவ்விடத்தில் பார்த்திருப்பார்
தகுதியுடையோரை சருக்கார்கள் பிள்ளையர்கள் 287

பொல்லா அபூஜஹில் தான் புருக்கா னுடையோரை
மல்லாக வேணுமென்று வாய்மதப்பாலே யழைத்தான் 288

ஹயா மிகுதியான கருணை முஹம்மதனார்
நியாயமல்ல வென்றெழுந்தார் நெறியுடைய அம்மருளால் 289

தூசிப்போட்டு வந்தவனை துய்ய நபியிறசூல்
வீசியெடுத் தெறிந்தார் மேலோர்கள் தாம் நகைக்க 290

ஆன அபூத்தாலிபும் அப்பாசும் ஹம்ஸாவும்
ஷீனத் தபூலஹபும் சிறியாரை யாசரித்தார் 291

வயதிருபத் தஞ்சுதனில் வல்லிகதீஜா பயலோடு
உய்தமுள்ள ஷாமூர்க்கு ஓசையுடையோ ரெழுந்தார் 292

கச்சைவடம் செய்ய வென்று கதீஜா அனுப்பியபின்
மிச்சமாய் செய்து வந்தார் மேலோ னருளாலே 293

கதீஜத்தெனும் வல்லியர் தான் கருதினார் நன்னபியை
அதிக கலியாணம் ஆடம்பரமாய் முடிக்க 294

கொட்டும் குளமும் குறவை சத்தமும் வெடியும்
தட்டிமுறை சாயசங்கை யல்லயென் றுரைத்தார் 295

அழியும் துன்யாவில் ஆசை யெல்லாம் அழியும்
களியும் விளையாட்டும் நத்தா முனிவாகும் 296

ஒன்பது அம்முடைய உத்தாரச் சொல்படியே
அன்பாய் கதீஜாவை ஆனநிகாஹு செய்தார் 297

குவைலிதெனும் தலைவர் கொஞ்சுங் கிளிமகளை
பயுடைய நல்நயினார் தகுமாய் மணமுடித்தார் 298

ண்ணில் அழகாம் பிறைபோல் கதீஜாவை
ண்ணில் நிகரில்லா முஹம்மதுர் றசூல் முடித்தார் 299

ம்பது ஆமில் நயினார் முஹம்மதற்கு
ர்ப்பாய் நபிபட்டந் தான் குணமாக வந்தது காண் 300

இங்கட்டுமுலை சிறப்பாய் றமலானில்
மங்காத மக்கந்தனில் வந்தது காண் தூது பட்டம் 301

தூதர் ஜிபுராயீல் தான் துய்ய நபீ யளவில்
ஆதிமுதல் கொண்டு வந்தார் ஆனசூறத்து அலக்கை 302

பின்பு முஸம்மிலெனும் பேருடைய சூறத்து தான்
அன்பா யிறங்கிற்று காண் அண்ணல் அஹ்மதுக்கு 303

அச்சப்படுத்தி அறிவிய்யுமென் றேவியபின்
உச்சாயமா யழைத்தார் ஒருவன் வணக்கத்திற்கு 304

காசிபென்றும் சாஹிறென்றும் கருத்துடைய ஷாஇறென்றும்
ஆதி நபியை அதபு கேடாய் பேசுவர்கள் 305

ஷைபான உத்துபாவும் ஷைத்தான் அபூஜஹிலும்
ஐபான பேச்சாக அஹ்மதரை பேசுவர்கள் 306

சாகா பெரியோன் சடுதி இவர்கள் தம்மை
ஆகா பலாயால் அழித்தானிவர் பொருட்டால் 307

அவ்வல் இஸ்லாமானார் அணங்கி கதீஜத்துதான்
செவ்வாக பின்பு வந்தார் ஷெய்கு அபூபக்கரும் 308

அலியும் உதுமானும் ஆனத்தல்ஹா ஸஃதும்
அலையாத மார்க்கத்திற்கு அபூபக்கருக்கு பின் வந்தனர்கள் 309

பொன்னாலே சில்சிலத்து போட்டுவாள் கைபோட்டு
மன்னர் நபீயை வதைக்க உமறெழுந்தார் 310

எழுந்தேகிப் போகையிலே இரஷப கலிமாவுரைய
அழுத்தமாய் கேட்ட பின்பு அஹ்மது பால் தீனில் வந்தார் 311

மாட்டின் கலிமாவை வாகாய் உமற் கேட்டு
தேட்டமாய் தீன் வழியில் துய்யநபீ பக்கல் வந்தார் 312

உமறுபுனு கத்தாபு உறுதிதனில் வந்தளவில்
கமரி திகைத்தார்கள் காபிருக்குள் ஆண்களெல்லாம் 313

சிறிய தகப்பர் சிறப்பான ஹம்ஸத்துதான்
அறிய உமறுக்கு முன் அன்பாக தீனில் வந்தார் 314

புராக்குப் பரியேறி வீராய் இறையோனை
திறமாகக் காட்சி செய்து திரும்பினா ரோரிரவில் 315

மக்கந்தனி லுள்ளவர்களுக்கு வள்ளல் நபியிறசூல்
சக்கறவே சொன்ன பின்பு சந்தாபமாய் திகைத்தார். 316



மிக்க அபூபக்கரும் வீரான தீனவரும்
ஹக்கெனவே ஈமான் கருத்தாகக் கொண்டனர்கள் 317

எதுரிபெனும் ஊரில் இரு மூன்று பேர் நபிக்கு
மதுரமுள்ள மக்கந்தன்னில வந்தீமான் கொண்டனர்காண் 318

மதுரிபெனும் பட்டணத்தில் இஸ்லாம் பறந்த பின்பு
எதிபோல் முஹம்மதனார் மக்கம் விட்டேகினர்காண் 319

மதீனமெனும் பதிக்கு வள்ளல் எழுந்தேறியபின்
அதிக இஸ்லாமில் அவரவரே வந்தனர்கள் 320

பின்பு படைகூடி போரான மக்கந்தனில்
அன்பாக வந்து அஹ்மதுர் றசூல் பிடித்தார் 321

மறுகால் மதீனத்திற்கு வள்ளல் எழுந்தேறி
திறமாக சேனைபடை தேசந்தனில் அனுப்பி வைத்தார் 322

புரிசைகளும் கோட்டைகளும் பூங்காவனத் தோப்பும்
வரிசை மிகுதியுள்ள பலதுகளைப் பிடித்தனர்கள் 323

பலமுடைய பேர்களென்ன பெரியோன் குரான் மொழியில்
நலவான யார்கள் தம்மை நாயன் புகழ்ச்சி செய்தான் 324

அபூபக்கரும் உமறு அண்ணல் உதுமான் அலியும்
சவுறமுள்ள யார்களெல்லாம் சங்கையுள்ள போவர்காண் 325

திட்டாந் தாங்கள் கொண்டு தீன்வழியில் வந்தவர்கள்
மட்டில் அடங்காது வாயால் துலைக்கரிது 326

மங்கா மதிபிளவை மண்ணில்வர சொன்னவர்க்கு
எங்கும் நடுங்கும் இவர் கீர்த்தி கேட்டளவில் 327

உடும்புமுசல் ஒட்டகையும் உன்னிசலாம் சொன்னவர்க்கு
நடுங்கும் புவிஏழும் நாயனருளாலே 328

மாட்டினமும் ஆட்டினமும் வரிசைசுஜூ திட்டவர்க்கு
கூட்டங்களெல்லாங் கலையும் கோமானிவ ரடுத்தால் 329

கல்லும் மரமும் கருதிசலாம் சொன்னவர்க்குக்
கொல்லும் காடிபுலி குணமாகத் தாள்பணியும் 330

ஆட்டை ஹயாத்தாக்கிவைத்த அண்ணல் முஹம்மதர்க்கு
காட்டிலுள்ள மான்மரைகள் கனமாய்ச் சலாமுரைக்கும் 331

கைபரென்னும் பதியில் கறுத்த ஹிமானுடனே
றைபில்லா பேசியற்கு எல்லா மடிபணியும் 332

பொழுதைத் திருப்பிவைத்த பெருமான் முஹம்மதர்க்குப்
பழுதறவே எல்லாரும் பாங்காய்ப் பணிந்துதிப்பார் 333

துப்பி உமிழ்ந்து துலக்கமில்லாக் கண்விழியை
செப்பமுள்ள கண்ணுக்கும் சுல்தான் முஹம்மதனார் 334

களண்ட விழி ஐனை கையால் தரிபடுத்தி
அழுத்தமுள்ள கண்ணுக்கும் அஹ்மதிர் றசூலிவர்காண் 335

பட்ட மரங்கள் தன்னை பச்சைமர மாக்கிவைக்கும்
குட்டங்குறைத் தீர்க்கவந்த கோஜா முஹம்மதுகாண் 336

செத்தஜைது தனக்கு துலக்கமாய்ச் சாட்சி சொன்ன
புத்தை விளபணிவைத்த புறுகான் முஹம்மதுகாண் 337

பட்டகுத்தி ஈத்தமரம் பள்ளிதனில் அலற
கட்டி அணைத்தக் கருணை முஹம்மதர்காண் 338

உப்புக் கிணற்றில் உமிழ்ந்தமுத மாக்கிவைத்தோர்
செப்புரை யில்லாஊமை செப்ப துஆவிரந்தோர் 339

கெஞ்சி துஆவிரந்தார் கிருபை முஹம்மதனார்
அஞ்சி படிவாசல் ஆமீனுரைத் ததுகாண் 340

ஓனாய் சலாமுரைத்த உண்மை நபினார் தமக்கு
ஆனைக் காடிப்புலி ஆசரித்து தாள்பணியும் 341

மானைப் பிணையாகநின்ற வள்ளல் அஹ்மதனார்
பூனைக்கிரங்கி புனல்சாய்த்த புண்ணியர்காண் 342

உம்மு ஐமனென்பவரும் உருநபிதன் நீர்பவுலை
அம்மிக் குடித்து அழகான பெண்ணானார் 343

நிலவைப் பிளந்தழைத்தார் நபினார் நபியிறசூல்
பலரும் விழியால்காண பாங்கான மக்கந்தனில் 344

முன்காணும் போலே முதுகுப் பிறத்தாலே
பின் காணு மெங்கள் பெருமான் அஹ்மதர்காண் 345

காளிமா கொண்டு நபி ஆயிரம் பேர்க்கு
நீளும் பசிதீர்த்த நபினார் முஹம்மதர்காண் 346

தாயுந் தகப்பரையும் தகுமாய் ஹயாத்தாக்கி
தீன்வழியில் ஆக்கிவைத்த சுல்தான் முஹம்மதர்காண் 347

வெளிக்கிருக்க வேண்டுமென்று வீராய் யிருமாத்தை
அழைத்தா ரதுகள்வந்து அமைந்து மறைத்ததுகாண் 348



காட்டாளிவந்து நபினாருடன் உரைத்தான்
காட்டும் புதுமையென்று காட்டினா ரப்பொழுது 349

மரத்தை யழைத்து வடிவாய் சலாமுரைத்து
தூரத்திபோ யென்று சொன்ன துய்ய முஹம்மதர்காண் 350

அப்பன் அஃரூபீ அன்ன முஹம்மதர்க்கு
ஒப்பாக ஈமான் உறுதியாய் கொண்டனர்காண் 351

அன்றுப் பிறந்த அனையாடைப் பிள்ளையுடன்
வென்றிடன் பேசிநின்ற வீரர் முஹம்மதர்காண் 352

குருவாம் முஹம்மதனார் கொடைகொடுக்குங் கையாலே
திரைபோல நசல்பிணியைத் தொட்டா லப்போதகலும் 353

ஹாஜத் திருக்க வென்று கல்லினத்தை யேவியபின்
நேசமுடன் கல்லினங்கள் நெருங்கி மறைத்ததுகாண் 354

வாய்க்காலின் அக்கரையில் வலியபெருங் கல்லினத்தை
நோக்கி யழைத்தபின்பு நீர்மீதில் வந்தது காண் 355

ஈத்த மரக்குலையை யெங்கள் நபியழைத்து
ஏத்தாக போகச்சொன்ன எங்கள் நபினார்காண் 356

முன்னூறு பேர்களுக்கு மோசமற ஓர்ஸஹனில்
அன்ன ஒஜீபனத்தை அழகாய் அமைந்தனர்காண் 357

அஹதான நாயனை அறுஷேறி காட்சிசெய்தார்
உஹது மலையை யுதைத்தார் அலையாமல் 358

ஈத்தமட்டை தன்னை யெடுத்து உகாஷத்துக்கு
ஏத்தமுள்ள பட்டயமா யீந்தார் பெரும்படையில் 359

உலர்ந்த உற்ஜூனை ஊனமைத்த பட்டயமாய்
கலந்து பெரும்படையில் கத்தியில்லா பேர்க்களித்தார் 360

ஆட்டுக் குரங்கு அஹமதுட னஞ்செனவே
தேட்டமுடன் தின்றபின்பு செப்பி யுரைத்ததுகாண் 361

கடிந்த இருளில் கரித்தளிபோல் ஆமினுக்கு
தொடர்ந்தேகி வந்ததுகாண் துய்யோன் பறக்கத்தினால் 362

படைவந்து சூழ்ந்தபின்பு பயகாம்பர் மண்ணையள்ளி
சடுதி யெறிந்தவர்கள் சங்கைகெட்டு ஓடினர்கள் 363

உளூசெய்த தண்ணீரை யுண்டோர் வசகேடு
மலைபோல் அகன்றதுகாண் வரிசையுள்ள தண்ணீரால் 364

அன்னமும் அருந்தயிலே அழகாய் தஸ்பீஹு
உன்னி யுரைத்ததுகாண் உண்ணுங் களரிதனில் 365

நீள ஸடியில்லா நயினார் முஹம்மதர்க்கு
மீள வருகையிலே முகில்குடையாய் வந்ததுகாண் 366

ஏறவொண்ணா பருமரத்தை யேறுமர மாக்கிவைத்த
நாறொளிவில் ஊசிதன்னை நோக்கி ஹூமைரு யெடுத்தார் 367

சப்புற மஞ்சேறி சங்கையுடனே அர்ஷில்
ஒப்புவமை யில்லானை யுரும்விழியால் கட்சிசெய்தார் 368

ஹிரூவும் துபைறும் கிருபையுள்ளோர் ஏறினதால்
தருபாய் யலைந்ததுகாண் சந்தோஷமாய் குஷியாய் 369

மலையி லிருக்கையிலே வன்னிப்பிரு சிலந்தி
கலைபோல் கய்றுநெய்து கருத்தாகக் கூவிற்றுகாண் 370

குப்பார்கள் வந்து குறித்தவர்கள் பார்த்தபின்பு
கப்பார் அவர்கள் கண்ணை யழித்தான் தெரியாமல் 371

வீட்டை வளைந்தபின்பு வீருடையோர் மண்ணையள்ளி
தேடிய காபிர்கள்மேல் தூவி நடந்தனர்காண் 372

சுருக்கத்தெனு மவந்தன் துய்யபரி கால்நிலத்தில்
வாரமல் பதிந்ததுகாண் வரிசையுடையோர் பொருட்டால் 373

பட்டயத் தாலே பயகாம்பரை யொருத்தன்
வெட்டவந்த கைசோர்ந்து விறுமுத்தி யாகநின்றான் 374

கெஞ்சி இரந்தான் கிருபை நயினாரிடத்தில்
முன்சகுண யில்லார் முனியாமல் போகச்சொன்னார் 375

காதிம் அனஸவர்க்கு கருதி துஆவிரந்தார்
நாதனருளால் நலமிகுதி பெற்றார் காண் 376

மஹ்மூதெனு மவர்தன் வாகுடைய வதனந்தனில்
அஹ்மதி றசூலுமீந்தார் அழகம்புலி போலானார் 377

நபிஅத் தென்பவருக்கு நயினார் துஆவிரந்தார்
நோவுபிணி யில்லாமல் நூற்றிருப தாயிருந்தார் 378

ஈக்கொசுகு மேலில் இராது ஒருக்காலும்
நோக்குமடி மண்ணில்லா நூறுமுஹம் மதர்காண் 379

திட்டாந் தரமிகுதி சுல்தான் முஹம்மதர்க்கு
மட்டிலடங்காத பஹ்றுபே லாயிருக்கும் 380



அவ்லியா வெண்ணி யெல்லாம் அவர்கடலி லாயிருக்கும்
நவிலும் படிகேட்டு நடக்கின்ற நாயகர்காண் 381

தாட்சி மிகுதியுள்ள சங்கைநயினாரிறஸூல்
தீட்சை பெற்ற யார்களுக்கு சிறப்பாய் சலாமுரைப்பார் 382

ஆடுதவ்று ஒட்டகங்கள் அஹ்மதிறஸூல் கறப்பார்
அட்டை அவர்கையால் அழகாய் கழுகுவர்காண் 383

வீட்டைத் திருக்கரத்தால் விளங்க பெருக்குவார்காண்
காட்டி லும்வாம்பழத்தை கருங்குலையை தின்னுவர்காண் 384

கம்புளி சூபு கனமுடைய கோதடிகள்
சிம்பா நபியிறசூல் சிறப்பாகத் தாமுடிப்பார் 385

அம்புவியில் முன்னடக்க அஹ்மதுறசூல் பொருந்தார்
தும்பு விறகுதன்னை சுமந்து வருபவர்காண் 386

எடுக்கவொண்ணா கல்லினதனை யெடுத்து சுமந்துவந்து
அடுத்து உதுமான்கபுரில் அலாமத்து வைத்தவர்காண் 387

அஹ்மது றசூலும் ஆயிஷத்து மாதாவும்
மகுண முடன் இசலி வாகாய் நடப்பார்கள் 388

ஒருக்கா லிவர்முந்துவார் ஒருக்கா லிவர்முந்துவார்
திருக்காட்சி செய்துநபி சீராகு மென்றுரைப்பார் 389

சீலப்பிள்ளை சமைத்து சிறியார் விளையாட
ஆலம் நபிபொருந்தி அமத்தாமல் பார்த்து நிற்பார் 390

மாதவிடை யாயிருக்கும் வல்லிமிஞ்சும் தண்ணீரை
காத மணக்கவரும் கருணைநயினார் குடிப்பார் 391

ஆயிஷத்து தன்னை யழகாய் உனுக்கில் வைத்து
மாயிசாம்பேர் சிலம்பும் மங்கையர்க்கு காட்டுவர்காண் 392

பேர் ஹஸன் ஹுஸைனைப் பிரிசமாய்த் தோளில் வைத்து
சீராக கொண்டேகும் சின்கண் முஹம்மதர்காண் 393

ஸைனபு நாச்சியார்தன் சிறப்பான பிள்ளைதனை
ஸீனத்துடன் தோளில்வைக்கும் சீமான் முஹம்மதர்காண் 394

வீட்டிலுள்ள வேலைதனை வேத முஹம்மதனார்
கூடவீட்டிலிருந்து கூசாமல் செய்பவர்காண் 395

பெண்டுகள் பிள்ளையுடன் பேரன்மார் தங்களுடன்
வென்றியுடனன்றி செய்து வீராய் யிருந்தனர்காண் 396

ஆட்டுத்தான் தின்ன அழைத்தால் நபியிறசூல்
மாட்டேனென்று சொல்லாமல் வழிப்பாடா யேகுவர்காண் 397

பாஸாரிலேகி வரிசையுடன் நன்மை தின்மை
கூசாமல் சொல்லுமெங்கள் கோஜா முஹம்மதர்காண் 398

கடையில் சரக்குகொண்டு கையிலே யிருக்கையிலே
தொடர்ந்தவர்கள் கேட்பார்கள் துய்யோர் கொடுக்கார்காண் 339

படையில் புலியாம் பயகாம்பர் நம்மிறஸூல்
அடியாரை பெண்டுகளை அடியார் ஒருக்காலும் 400

பெண்டுகள் பிள்ளையுடன் பெருமையுள்ள சீஷருடன்
வென்றியுடன் முதனம் வீராக சொல்லுவார்காண் 401

இரண்டுலட்சம் பேர்களுண்டு நல்ல நபினருக்கு
மூண்டி அவர்கள் தம்மை முனியார் ஒருக்காலும் 402

கல்புறங்க நம்மிறசூல் கருதி ஒருக்காலும்
கல்புகாய் தன்னை கடிந்து நோக்காடு செய்யார் 403

எறும்பு கொசுயினத்தை யிரங்கி யொருக்காலும்
திறமுண்டு செய்து கொல்லார் திங்கள் முஹம்மதர்காண் 404

தகப்பனில்லாப் பிள்ளைதன்னை தலையைத் தடவிக்கொண்டு
உகப்பாக கூட்டிவுண்ணும் உண்மை முஹம்மதர்காண் 405

தட்டுமுட்டுக் கண்டால் சங்கையுள்ள நந்நபினர்
கட்டிச் சுமந்து கருவீட்டில் செல்லுவர்காண் 406

அன்னம் கறிதன்னை ஐபாய் யொருக்காலும்
உன்னி யுரையாத உண்மை முஹம்மதர்காண் 407

பிள்ளையடியார்கள் பெண்கள் பிறர் குற்றமெல்லாம்
தள்ளி பொறுக்குமெங்கள் சங்கை முஹம்மதர்காண் 408

இரக்க மிகுதியுள்ள எங்கள் நபினரிரஸூல்
இரக்கவந்த பேர்களுக்கு ஈவார் முதல்மிகுதி 409

காற்றுங் கடலும் கருமேகமும் மலையும்
ஏத்தநபீ கொகைகட்கு இவையெல்லா மொவ்வாது 410

தேடிவந்த பேர்களுக்கு செய்து முஹம்மதனர்
ஆடைவெள்ளிப் பொன்னினங்கள் அழகாய் கொடுப்போர்காண்

வானவரும் பூமியரும் வரிசை அன் பியாமாரும்
தானமுடன் ஒவ்வார்கள் தகுமாம் வணக்கத்துக்கு 412



இரவில் முழித்து யிறையோனை யொருக்காலில்
பருதி யளவும் பரிவாய் வணங்குவர்காண் 413

குருவி யினம்போல் குரல்விட்டழுது நின்று
மருவி றஹ்மானை வணங்கும் முஹம்மதர்காண் 414

உம்மத்தின் மேலிரங்கு முண்மை முஹம்மதனர்
இம்மி றைந்தாபோலே யிரவில் அழுபவர்காண் 415

குருவாம் முஹம்மதனர் குதாயை பயந்திரவில்
அருவி நீர்போலே யழுவார்காண் ஆணிமுத்தாய் 416

திங்கள் வியாழம் சிறப்பான வெள்ளிதனில்
சங்கை அய்யாமுல்பீலில் தக்கநோன் புள்ளவர்காண் 417

றஜபு ஷஃபான் யவம் அறபா ஆஷூறு
திசையாய் முஹர் ரம்தனில் தீனுடையோர் நோன்பு வைப்பார் 418

ஸதக்காவைத் தின்னாத சங்கைநபி னரிறஸூல்
பதுக்காவல் நாளைக்கொன்று பாங்காய் கொடுப்பவர்காண் 419

மதிபோல் வதனுடைய வள்ளல் பயகாம்பர்
ஹதியாக் கெதிராய் கனமாய் கொடுப்பவர்காண் 420

துனியாவை நாடாத துய்யநபி யிறஸூல்
கனியான நாயகனைக் கண்டு வணங்குவார்காண் 421

பசியா லிடையிற்கல்லைப் பாங்காக வைத்துகட்டும்
குஷியாக நின்றுதொழும் கோஜா முஹம்மதர்காண் 422

போட்டு பொறுப்பார் புறுக்கான் முஹம்மதனர்
ஆட்டுத் தோள்மேலே அழகாய் யுறங்குவர்காண் 423

மூடியான கம்பளியில் முஹம்மது றஸூல்நபினர்
மடியாமல் நித்தம் வடிவாய் யுறங்குவர்காண் 424

மாத்தாலே பாத்திரத்தில் வரிசைநபி னரிறஸூல்
காத்தாலே கோரிதின் பார் களரிதனி லிருந்து 425

கரிவான றொட்டிதனை கனத்த பசியாயிருந்து
பரிவாக தின்னுமெங்கள் பக்றுன நபினர்காண் 426

எளியார்கள் தம்மை யிரங்கிப் புகழ்ச்சி செய்வார்
தெளிவா யவர்களுடன் சிறப்பாய் கலந்திருப்பார் 427

இரப்பா ரிறைப்பக்கலில் என்னை யெளியாரினத்தில்
பறப்பாக கூட்டருள்வாய் படைத்தோனே யென்றுசெப்பி 428

சொல்வார் நபியெளியார் சீமான் தனக்குமுன்பாய்
சொல்வார்கள் ஜன்னத்துக்கு சீராக தாவருஷம் 429

ஒருநா ளிருக்கால் உண்ணாத நம்மிறஸூல்
இரிபோல் கொடை கொடுப்பார் கேட்டுவந்த பேர்களுக்கு 430

தோல்கோதும் பால்நிறம்ப தின்னாத நம்மிறஸூல்
மாலரசை தன்னை வருடார் ஒருக்காலும் 431

நாற்பது நாளளவும் நபிவீட்டிலே நெருப்பு
கூர்ப்பாக யில்லையென்றூர் குணமான ஆயிஷாத்து 432

ஈத்தபழமும் இனிய தண்ணீரும் புசித்து
ஏத்தமுட னிருந்தார் எங்கள் நயினாறிறஸூல் 433

பீத்திகு நற்சுரக்காய் விருப்பமுள்ள வெள்ளரிக்காய்
வெற்றியுள்ள நம்நயினார் விருப்பமுடன் தின்பவர்காண் 434

ஈத்தம் பழமும் இனிய முந்திரிப்பழமும்
ஏத்தமாகத் தின்னுமெங்கள் யிறஸூல் முஹம்மதர்காண் 435

ஈரவெங்காயம் இரஸூல் முஹம்மதனார்
சீராக வெந்தபின்பு திண்ணமுடன் தின்றனர்காண் 436

தோல்கோதும் புரொட்டியை துய்ய நபியிறஸூல்
ஆள்களுக்கும் கொடுத்து அழகாயருந்துவர்காண் 437

கோழிறைச்சி கொக்கிறைச்சி ஹூத்திறைச்சி முசு விறைச்சி
நீளமுள்ள மரையிறைச்சி நயினாருந்துவர்காண் 438

குற்றம் பொறுக்குமெங்கள் கோஜா முஹம்மதர்காண்
கத்தி பறைவார்கள் கனமறிய மாட்டாமல் 439

பத்தி யிழுப்பார்கள் பரிவட்ட கம்பளியை
புத்தியில்லா மனிதரென்று பொறுப்பார் நபியிறஸூல் 440

ஆகாத பேச்சுரையை அலிஉமறு கேட்டளவில்
வாகாண வாள்பிடுங்கி வதைப்பமோ வென்றுரைப்பார் 441

அப்பள் நபிசொல்லுவார் அறியாத மாந்தரிலன்
ஒப்பாய் கொடை கொடுத்து ஓடிப்போ வென்றுரைப்பார் 442

நபியிறஸூல் வீடுதனி லிரண்டுஷஹ் றுமளவும்
அவித்த வசீ பனங்கள் ஆயிஷா யில்லையென்றூர் 443

மூன்று நாலுநாள் முஹம்மதுர் றஸூல்நயினார்
தாண்டப் பசியில் தழும்பா திருப்பார்காண் 444



வாய்த மிகுதியுள்ள வள்ளல் முஹம்மதனார்
கூந்தாலி கொண்டு குடியத்தை வெட்டினர்காண் 445

ஆட்டை யறுத்து அறிந்தார் சிலமனிதர்
காட்டில் நபியிறஸூல் ஹத்தபுமிக கொண்டு வந்தார் 446

அகமலப்பும் முகமலப்பும் ஆதரவு மிகுதியுள்ளோர்
தகுதியுடன் நானிலத்தில் சங்கையுட னேறுவர்காண் 447

தாட்சியுடன் பிறகாலே சங்கையுள்ள பேர்களே
தீட்சைபெற்ற யார்கள் தம்மை செப்பமுடன் வைப்பவர்காண் 448

கஸ்தூரியும் அம்பறும் காபூறும் சந்தனமும்
விஸ்துடையோர் பலுலத்துக்கு மிஷ்கிவைக ளொவ்வாது 449

ஆசாரம் செய்யும் அஹமதி றஸூல்நயினார்
பேசார் விழிப்பேச்சு பேசுவையெல்லாம் வஹயாம் 450

உத்தாரமன்றி ஒருக்காலு மொருசெயல்கள்
வித்தாரமாக செய்யார் வீரர் முஹம்மதர்காண் 451

சொல்லும் செயலும் துருஸ்தான ஹாலனவும்
அல்லும் பகலும் அதபா யிருப்பவர்காண் 452

துன்யாவின் வாழ்க்கையெல்லாம் துய்யோர் முனிந்துகொண்டு
கனியான வல்லவனை காலமெல்லாங் காதல் வைத்தார் 453

புலுக்கியா வென்பவர் தான் பூமியெல்லாம் திரிந்தார்
குல்கழகாம் நன்னபியை குஷியாகக் காணவென்று 454

பொன்னாலே தவ்றூக்கில் பெருமான் நபினாமத்தை
மின்னொளிபோல் கண்டதினால் மிகுதி இஷ்க்காய் திரிந்தார் 455

ஆகா யெஹூதி யறுத்தானிவர் வன்னிப்பை
பாகமாய் கண்டான் மறுநா ளிருமடங்காய் 456

இந்தபடி யவனும் இயல்பை யறுத்துவர
அந்த ள்ள வஸ்தியல்பு அழகாய் வளர்ந்து வரும் 457

தவ்றாத்தும் இஞ்சீலும் சங்கையுள்ள வேதங்களும்
அவ்றூது நபிவஸபு அழகாய் மிகுதிவரும் 458

அறுஷும் குறுசும் அவரொபைக் கேட்டலையும்
பரிசுங் கடல்மலையும் பயகாம்பரைப் புகழும் 459

பறக்கின்ற பட்சியெல்லாம் பயகாம்பர் பேரைகேட்டால்
உறக்கமிழந்து ஒரு தாரையாய் கேட்கும் 460

வல்லாஹு வல்லாஹு வல்லாஹு வல்லாஹு
சொல்லால் தொலையாது தூய்யோர்ப் புகழ்படைப்பால் 461

வானும் அறுசும் வரிசைக்குறுசும் திரையும்
மீனும் பொழுதும் இந்தும் மிகுதி ஸலவாத்துரைக்கும் 462

ஆண்டபெரியோன் அஹ்மதி றஸூல்நபியை
நீண்ட புகழாய் நிறப்பினன் வேதந்தனில் 463

தாஹாவென்றும் யாஸீனென்றும் தருமான ஹாமீமென்றும்
வாகான பேருரைத்து வல்லான் விளித்தனர்காண் 464

துன்யாவில் மண்மணலைத் துலைக்கரிது என்னாலே
கனியான நாயகரைக் கவலரிது கல்க்காலே 465

மக்கந்தனில் பிறந்து வாகாய் வளர்ந்தெழுந்து
சக்கறவே நாலுபத்தில் சங்கைப்பட்டம் வந்ததுகாண் 466

பின்பு அரசாண்டு பெருமைமக்கத்தில் இருந்தார்
அன்பாய் மதீனந்தனில் அரசுமூன்று ஆண்டிருந்தார் 467

அறுபத்தி மூன்றாண்டில் அஹ்மதுர் றசூல்நயினார்
சிறப்பாய் மவுத்தானார் திங்கட்கிழமைதனில் 468

அஸ்ஹா படங்களெல்லாம் அழுது மதியிழந்து
பிசகாமல் ஆயிஷத்தின் பிறையி லடக்கினர்காண் 469

எல்லாப் படைப்பும் அவர்மவுத்துக் காயிரங்கி
வல்லான் றன்பக்கல் புக்காவாய் யழுதார்கள் 470

வீடிழந்தார் சிலமனிதர் வெளியிழந்தார் சிலமனிதர்
சோடிழந்தார் சிலமனிதர் தீனிழந்தார் சிலமனிதர் 471

உயிரிழந்தார் சிலமனிதர் உடலிழந்தார் சிலமனிதர்
சைரிழந்தார் சிலமனிதர் சமதிழந்தார் சிலமனிதர் 472

காற்றுகட லமளிலே கப்பலிலே யானவர்போல்
ஏற்றமுள்ள யார்களெல்லாம் இருந்தங் கழுதார்கள் 473

கபுறை வளைந்து கரைந்தழுது நோக்காடாய்
ஸபுறை யிழந்து சலித்தார்கள் காலமெல்லாம் 474

பெண்டுக ளெல்லோரும் பேதலித்து புத்தியின்றி
கன்றினங்கள் போல கதறி யழுதனர்கள் 475

றபீயுல் அவ்வல்மாதம் ஈறாறு திங்களிலே
ஹபீபிறசூல் நயினார் கபுரிலொடுங் கினர்காண் 476



மூன்னோன் விதிப்படி யெழுந்து மிமாமில்லாமல்
தன்னாக மலக்குமனு தனித் தனியே தொழுதனர்காண் 477

அறுபதல்பும் முப்பதல்பும் ஆகத்துகை யிருவரிலும்
மறைவாய் கபுறமைந்தார் மறையோர் புதனிரவில் 478

மூஸா உடற்பிறந்தாள் உம்முகுல்தூம் நாச்சியையும்
முறுஸல் நபிஈஸா மாதானல் மற்யமையும் 479

மோசன் பிருஅவ்ன் மற்அததெனும் ஆசியையும்
முறுஸற் காசானோர் சொர்க்கமதில் மணமுடிப்பார் 480

எங்கள் நபிகபுறை யெழுபதல்பு வானவர்கள்
சங்கையுடன் சூழ்ந்து நிற்பார் தாணிமுடிவள்வும் 481

வல்லானருட்படியே வானவர்கள்முறை மூறையே
நல்லார் நபிதமக்கு நல்ல ஸலவாத்துரைப்பார் 482

பொன்னாலே குப்பாவும் பொன்னாலே கிந்தீலும்
என்னாளும் மின்னொளிபோல் இலங்கு மெங்கள் நபிகபுறு 483

என்னுடைய பாவத்தினா லெங்கள்நபி றவுலாவை
யுன்னிப் போய்க்காணும லொஞ்சி யிருக்கிறேன் 484

யாசெய்யிதீ பாவிக்கு நாடியது ஆவிரவும்
நோய்தோஷம் வாராமல் நோக்கி துஆவிரவும் 485

மூந்த எழுதப்படும் முஹம்மதுர் றசூல்நபியை
பிந்தியெல்லா முறுஸல்களும் பிறகா லெழுவார்கள் 486

வானவர்களும் றூஸ்லும் வள்ளல் லிவானிழலில்
சினத்துட னிற்பார்கள் செம்மலை சூழ்ந்துகொண்டு 487

உம்மத்தைத் தேடி நிற்பார் உண்மை முஹம்மதனார்
செம்மி வருவார்கள் சிறப்புடையோ ரும்மத்துகள் 488

பொற்பதியிற் சென்று புதுக்கக் கலியாணஞ்செய்து
துர்ப்பாக காட்சிசெய்து சுகித்தங் கிருப்பவர்காண் 489

வல்ல பெரியோனே வள்ளல் நபியுடனே
தொல்லையற சுவர்க்கம் செல்ல உதவி செய்வாய் 490

ஏழுக் கடலும் எழுவான மூமறுசும்
வாழ்விடையோ ரோஸ்பெழுத மாட்டா துமைவாக்காய் 491

முத்திரைப் போடுகிறேன் மிஸ்கீன்லா மென்பவன் தான்
முத்தி லுதித்தோர்தன் மேலான அவ்லாபை 492

துய்ய ஸலவாத்துக்கொண்டும் துய்யக் கருணைக்கொண்டும்
மெய்யுடைய நபி தமக்கும் விருப்பமுள்ள தோழருக்கும் 493

நபியுல்லா மாலைதனை நன்றாய்க் குறைதீர
பவனியுடன் கேட்டவர்க்கு பாவம்பிணிநோயகலும் 494

வல்லாஹு தனைக்கொண்டு மாறாம்து பொன்தஹ்பா
பல்ஏங்கிலும் பீகதின் மன்றாட்டு தேடுகிறேன் 495

ஹாமீம் நபியுடைய கருணைமிக யுண்டாக
ஆமீனா மீனுமீ னல்லா யுதவி செய்வான் 496

நபியுல்லா மாலையென்னும் றஸூல் மாலை

முற்றிற்று.

தம்மத் வபில்கைரி அம்மத்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மீறான் மாலை.

## காப்பு வெண்பா.

கத்த னருள்பெற்றோர் காதிறொலி மீறானை
யெத்திசையினும் புகழ்கீர்த்தி யியம்பவே—பத்தரெல்லாம்
பாதம் பணிந்திடவே பாறவொலி காதிறுக்கு
காதலா யுரைத்த விறை காப்பு.
மீட்சி பெறத்தக்க மீறானின் மாலைதனைத்
தாட்சியுடன் யான்கூறத் தாரணியிற்—காட்சிபெற
வெல்லோருந் தான்கூடி யிறையோன் றனக்காகக்
கல்லையன்றிக் கேளீர் களித்து.

## கடவுள் துதி

### கண்ணிகள்.

ஈரேழுலோக மிருமூன்று நாளையிலே
நேராய்ப் படைத்தோனை நித்தம் புகழ்வேனே 1
கெர்ப்பக்குழியரையிற் கிளர்விழிவாய் மூக்குச்செவி
ஒப்பாய்ப் படைத்தோனை யோதிப் புகழ்வேனே 2
உயிருடைய கல்லுக்கெல்லா மொன்றுபோலே யிரணம்
உயரவிருந்திறங்கு மூடையோனையான் புகழ்வேன் 3
முன்பொளிவதாயிருந்த முஹம்மதுர் றஸூல்நபியை
அன்பாய்ப் புகழ்செய்வே னாதியருடனுடனே 4
சலவாத்துரைப்பேன் றஹ்மான் நன்நபிக்கும்
பெலமானயார்களுக்கும் பின்பு சலவாத்துரைப்பேன் 5
ஆன அபூபக்கரை யன்பாகயான் புகழ்வேன்
கோனுமறுக்கத்தாபைக் கொள்கையுடனே புகழ்வேன் 6
இதுமுதுமானை யோசையா யான்புகழ்வேன்
காதனலியாரை நாடிப்புகழ்வேனே 7
அசுஹாபடங்கலையு மாசரித்தியான் புகழ்வேன்
அசுவாஜடங்கலையு மஞ்சிப்புகழ்வேனே 8
நுஹ்மானை மாலிக்கியை நுண்மையுள்ள ஷாபிகியை
கிஹ்மான ஹம்புலியை நெஞ்சில் மறவேனே 9
பிஸ்தாமிலென்பவரை போனதுன் னூனை
உஸ்தாது மஹ்றாபை யோதிப் புகழ்வேனே 10

சொல்லாற் புகழ்ச்சி செய்வேன் றுய்யசுகைது தம்மை
நல்லகஸ்ஸாலிதம்மை நாடிப் புகழ்வேனே 11

நாலுதரீக்கிலுள்ள நல்லவலியாக்கள் தம்மை
மாலாசை கொண்டு மகிழ்ந்து புகழ்வேனே 12

திட்டாந்தரமிகுந்த ஷெய்குவலிஷாதலியை
அட்டதிக்கும்பேரான ஐதறூசையும புகழ்வேன் 13

இராம்புமாமழைத்த கிருபையொலி மீருனைத்
திறமாய்ப் புகழ்ச்சி செய்வேன் றிறலோனருளாலே 14

சேகுசுலைமானைச் செப்பமாயான் புகழ்வேன்
வாகவரின் மக்களையும் வாழ்த்திப் புகழ்வேனே 15

இவர்கள் பறக்கத்தினா லெங்களொலி மீருனுக்கு
நவமணிபோலிம்மாலை நாடியுறைக்குகிறேன் 16

ஜெயிலானிமீருனின் சீனதுள்ள மாலைதனை
மயலாகக் கேட்பவருக்கு வாழ்வுமிகவுண்டாகும் 17

நாட்டமுடன் கேட்பவருக்கு நன்மைமிகவுண்டாகும்
கூட்டமுடன் கேட்பவர்க்கு குதாபறக்கத்துண்டாகும் 18

பொல்லாங்கு நோயகலும் புண்ணியங்களுண்டாகும்
நல்லார்நபியுடைய நாட்டமவர்க்குண்டாகும் 19

மறுமைதனிற் செய்குடனே மஹஷறிலேயாயிருப்பார்
வெறுமையல்லா மகன்றிருக்கும் வீறுடையோர் பறக்கத்தினால் 20

## நூல்.

நபிபோனார் பிறந்தார் நானூற்றெழுபதிலே
புவியிலழகான புகழ்ஜெயிலானிற் பிறந்தார் 21

மீருன்பிறந்தவன்று விண்ணவரும் மண்ணவரும்
நீரோசை கொண்டாடி நித்தம் புகழ்ந்தார்காண் 22

அழகாசனூர்கிளையி லம்புவியாய் வந்துதித்தார்
பழமிகுதியுள்ள பதிஜெயிலானிற் பிறந்தார் 23

மாங்கனியுந் தேங்கனியும் வருக்கைப் பிலாக்கனியும்
பாங்காகவுள்ள பதிஜெயிலான் பட்டணம்காண் 24

ஆறுங்குளமு மழகான மாளிகையும்
நாறுமிகுதியுள்ள நாலோர்தம் பட்டணங்காண் 25

பொழுது நிலவொளிபோற் பிறந்தார் புவிமீதிற்
பழுதுகுறையில்லாமற் பறிவாய்ப் பிறந்தனர்காண் 26

காரார் முகிற்குழலும் ககனப்பிறைநுதலும்
நோமஞ்சுயுமாய் நிலவாயுதித்தனர்காண் 27



மையெழுதும் கண்விழியும் வன்னக்கிளிமூக்கும்
துய்யமானின்கழுத்தும் துரிஸ்தாய்ப் பிறந்தனர்காண் 28

அக்காலந்தன்னி லவர்போலழகரில்லை
இக்காலம் ஒல்லாக் இவர்போல் மனிதரில்லை 29

வந்துவந்து கண்டார்கள் வலதிலுள்ளோர்களெல்லோரும்
அந்தமிகுதியுள்ள வழகரிவரென்பார்கள் 30

தந்தையர்க்கு மன்னையர்க்குந் தாகமறவந்துதித்தோர்
இந்துநிலாப்போலிலங்கு மெங்கள் முஹியித்தீன்காண் 31

சேகபூசாலிக்குஞ் சேயிழை பாத்திமாக்கும்
வாஞ்பெற வந்துதித்த வள்ளல் முஹியித்தீன்காண் 32

பாத்திமத்து நாச்சியர்தாம் பயிற்றூறுமாண்டதிலே
ஏத்தமாய்ப் பெற்றெடுத்த வெங்கணயினூர்காண் 33

பிறந்தவுடனே புதுமைமிகக் கண்டனர்கள்
சிறந்தமஷாயிக்குமார் திசையாளும் பிள்ளையென்றார் 34

மேகம்பிசகாய் வெளியாக நோன்பதனை
வாகினவெளியாக்கும் வாழ்வுடைய மீருன்காண் 35

மாட்டின்பிறகை விளையாடப் போகையிலே
நாட்டமுடன் மாட்டுரையைக் கேட்டுநின்ற மீருன்காண் 36

படிக்குந்தலத்திலுக்குப் பலகையுடன் போகையிலே
அடிக்கீழ் நடப்பார்க்க லம்லாக்கு வானவர்கள் 37

குறைந்த வயதிற் குரூன் முழுதும் பாடமிட்டோர்
அறிந்தாரொலியெனவே யையிரண்டு வயதுதனில் 38

மார்க்கந்தனில் வளர்ந்த வரிசையுள்ள நயினாரைப்
பார்க்கப் பசிபோகும் பாவந்தொலையகலும் 39

மேல்வீட்டிலேறி விழிநீட்டிப் பார்க்கையிலே
கால்கூட்டமாகநிற்கும் ஹஜ்ஜு மலைகண்டனர்காண் 40

அப்போ திறங்கி யவருடைய தாயவில்
ஒப்பானயில்மோத வுத்தாரந் தாருமென்றார் 41

தாயாருமப்போ சலித்தழுது முத்திக்கொண்டு
போய்வாருமென்று சொல்லிப் போகத்துவாவிருந்தார் 42

நாற்பது பொன்காசு நல்லமகன் கோதடியிற்
கூர்பாகவைத்துதைத்தார் கோதைபாத்திமாதம் 43

வழிவிட்டனுப்பி வைத்தார் வாகனகாபிலத்தில்
களிகூர்ந்தவர்களுடன் கடுகநடந்தனர்காண் 44

பாதையர்களோடே பரிவாய் நடக்கையிலே
கோதாரிக் கள்ளர்வந்து கொள்ளைக் கொண்டார் கூட்டந்தனை 45

உன்னிடத்திலேதுண்டென வோடிவந்தகள்வருக்குப்
பொன்னுண்டெனவுரைத்த பொய்சொல்லாமீருன்காண் 46

மெய்யாகக்கண்டதினல் மேவிவந்தகள்ளரெல்லாம்
கைபிடித்தவுபாவிற் காதலித்து வந்தனர்கள் 47

பகுதா தெனும்பதியில் வந்துபடித்தாரறிவு
நகுவுசறுபுபாய னல்வறாலட்சணமும் 48

பிகுவும் தபுசீறும் பெரியஹதீதறுவும்
தகுமானமஃரிபத்தும் சங்கைதரிகதையும் 49

துருவத்தின் மேலிருந்து தோளின் மேற்காறென்றவ
ரீருபத்தினலறிவு மினிதாய்ப்படித்தனர்காண் 50

அவர்காலந்தன்னி லவர்போலறிந்தோரில்லை
எவருமவர்புத்திரனு யிருக்கின்றமீருன்காண் 51

தூரந்தனிலிருந்து துய்யவுலமாக்களெல்லாம்
சீரார் இல்மைப்படிக்கத் தேடியிவர்பால் வருவார் 52

எங்கும்புகழானர் இல்மிகுகியானதில்
மங்காமதிபோலே மண்ணிலொளியாகநின்றூர் 53

ராஜாக்கள் மக்களெல்லா நல்லநயினராளவிற்
கூசாமல் வந்திருந்து கொண்டாடி வேலைசெய்வார் 54

நேர்ச்சைமிகுதிவரும் நெயினர்மதுரசத்தில்
ராச்சியத்திலுள்ளவர்க ளுடிவரும்பீரிவர்காண் 55

துனியாவினசையினைத் தொலையிலெடுத் தெரிந்து
கனியானநாயகனைக் காதலித்துக்காடானர் 56

ஐயைஞ்சியாண்டா யமர்ந்து திரிந்தாரிரவில்
மெய்யஞ்சிமேலவனை விரும்பித்தவஞ் செய்யவென்று 57

ஒற்றைக்கால்மேலே யொருவன் ரனையாசரித்து
வித்தாரமாக நின்று விரும்பித்தொழுபவர்காண் 58

மதிள்மேன்முளையறைந்து வாகாகக்கையோட்டுக்
கொதியாவணக்கஞ் செய்யுங் கோஜாமுஹியித்தீன்காண் 59

இரவில்விழித்தே யிறையவனைத் தாம் வணங்கிக்
குருவியினம்போற் குரல்விட்டழுதவர்காண் 60

இசாவினெளுக்கொண் டினிதாய்ப்பஜாறுதனை
விசாரமாய்காற்பதுசால் மேவித்தொழுபவர்காண் 61

காட்டுக்குளையறுந்திக் கருஞ்சுனையினீர்குடித்து
நாட்டமிகவாயிறைய நலமாய்வணங்கினர்காண் 62

வார்த்தைமூறியாமல் மன்பூதைதாமருந்திப்
பார்த்தங்கிருந்தார் பரிவாகத்தீன்வருஷம் 63



காடிபுலிகடுவாய் கருநாகங்கட்டானைச்
சாடாகச்சூழ்ந்துநிற்குஞ் சங்கைமுஹியித்தீன்காண் 64

பாலுங்குசுபும் பரிவாய்வனுந்திரத்தி
லாலநபிபோர்பக்க லண்ணல்கலிற் கொண்டு வந்தார் 65

வரிசைமிகுதியுள்ள வள்ளல் கலிறுநபி
பிரிசமாய்க் காட்சிசெய்யும் பீர்முஹியித்தீன்காண் 66

மருவலாய் வந்திருப்பார் வள்ளல்நபி பேரர்பக்கல்
குருவாங்கலிறுநபி கோமானருளாலே 67

பதினைந்து வாண்டளவும் படைத்தோன்குருன் முழுதும்
மதுரமாயோரிரவில் வணக்கத்திலோதினர்காண் 68

ஈரிருபதாமுழுக்கை யெண்ணியிறுத்தவர்காண்
மூரியிபுலீசுலாயை மோசமெனக் கண்டவர்காண் 69

தீவாயிலாயிருக்குஞ் செயித்தான் கூட்டந்தனைச்
சாயமற்றள்ளித்தொழும் சங்கைமுஹியித்தீன்காண் 70

ஜான் கூட்டமாகவந்து சாயிமுறைகேட்கவென்ன
வான்பலகைபார்த்துகுலு வழுத்துகின்ற மீருன்காண் 71

துப்பாகெனுங்கள்ளியைச் சுல்தான் றனக்கழைத்தோர்
சப்பானிப்பிள்ளைதனைத் தரையில் நடப்பித்தவர்காண் 72

நாகம்படவிரித்து நபிபோர்பக்கலிலே
வாகுபெறப் பேசிநின்ற வள்ளல் முஹியித்தீன்காண் 73

ஹம்மாதெனுஞ் செய்கைக் கைகளு கைமாற்றிவைத்தோர்
சும்மாயிவரைச் சுனையாற்றிற்றள் ளினதால் 74

மாறுநசுருனிதனை மார்க்கந்தனிலாக்கி
வீறுபுகழான வொலியாக்கிவைத்த மீருன்காண் 75

கோபமெழும்பியபின் கோண்மடங்களெல்லாம்
தூபம்புகையாயிருந்த துய்யமுஹியித்தீன்காண் 76

பறக்கும்பருந்துதலை பாரிடத்தில் வீழ்ந்திடவே
உறுக்கிவிழிநோக்கு முண்மைமுஹித்தீன்காண் 77

அப்போதவர்சலித்தே யல்லாபக்கலிரந்து
ஒப்பாய்பறக்கச் செப்பு மோசையுள்ளமீருன்காண் 78

ஏடெழுதும்போதே யெலிமண்ணைமேலுதிர்த்தும்
கூடுதலைவேறுகக் கோபித்தகோமான்காண் 79

எச்சமிட்டகுருவிதனை யெங்கன யினர்பார்த்தா
ரச்சமுடனக்குருவி யறுவில்விழுந்திறந்ததுகாண் 80

சோதிக்கவந்தவலைத் தொண்டுசெய்யவைத்தனர்காண்
ஆதிக்குநல்ல வழகாமொலியிவர்காண் 81

அருதென்னுமவரை யாணிவந்துதைத்ததுவே
ளகத்திலொருநினைவாங் காண்டவரை யெண்ணினதால் 82

இசுரும்சுருதும் கிடையாதற்ருஜூம்
பிசகறவேயட்டிவித்த பெருமான் முஹியித்தீன்காண் 83

கபுசிதனை பெறிந்து கள்ளர்தலை கொய்தனர்காண்
பவுசானபீரிவத்தம் பாதம்பணிகின்றவர்காண் 84

வீருயிருவரையை மீறிநின்ன பூபக்கரைப்
பீறில்நின்று தாயுடனே விளம்பவைத்தவேதியர்காண் 85

கோழியெலும்புதனைக் கோழியால் கூவவைத்தோர்
சாளியலிற்பொன்னைச் சைலிரத்தமாக்கி வைத்தோர் 86

ஜின்கொண்டுபோன பெண்ணைச் செய்தி சொல்லிமீளவிட்டோர்
பின்னுண்டாங்காரியத்தைப் பேசுகின்றமீருன் காண் 87

சேகுஹறியென்பவருஞ் ஷெய்கபுதுல்காஇறுமாய்
ஆகும்சபர்போம் பொழு ததிசயங்கள் கண்டவர்காண் 88

கபுஷாபிற்காரிகையைக் கண்டவர்கள் செப்பினதும்
கூவுசுரொட்டிங்கூசுங் கொதையர்க்குவந்ததுவும் 89

பட்டயீச்சம்மரத்தைப் பச்சைமரமாக்கிவைத்தோர்
குட்டங்குறைத்தீர்க்கவந்த கோஜூமுஹியித்தீன்காண் 90

ஈறுதகாலிதனை யீனத்துவாவிரங்தோர்
காறுதவொட்டகத்தைக் காட்டிவைத்தமீருன்காண் 91

வார்த்தை தட்டிப்போனவருக்கு வல்லோனருளாலே
காற்றமுள்ள கோயைந்து காடிப்பிடித்ததுகாண் 92

வளர்ந்தெடுக்கும் வெள்ளந்தனை வாராதேயென்றுரைத்தோர்
மழையைமொழிந்தோட்டிவைத்த வரிசையுள்ளமீருன்காண் 93

உச்சந்தனிலிருந் துறுமொழிகள் பேசயிலே
பச்சைப்பறவைவந்து பரிவாகக் கேட்பவர்காண் 94

சிறுநீரடக்கினரைச் செப்பமாய்த்தாமறைத்து
உறுநீரிலாக்கிவைத்த வுண்மைமுஹியித்தீன்காண் 95

சேகுமருறூஹூடைய சீனத்துப்பாவைகண்டு
வாகாய்ச்சலா முரைத்தார் மறுமொழியும் வந்ததுகாண் 96

ஐம்பதுஹாமளவு மஹ்மதென்னுஞ் செய்தவர்க்கு
அன்பாய்ப்படியளித்த அண்ணல் முஹியித்தீன்காண் 97

விராலுஞ்சிப் போனவர்க்கு மிசுறளவும் பசித்தவனம்
பரிவாகப்போனதுகாண் பாரவொலிபறக்கத்தினால் 98

கோய்க்கண்டபேர்கடமை கோக்கிப்பிணிதீர்க்கும்
காய்க்காப் பெருமரத்தைக் காய்க்கவைத்தமீருன்காண் 99



ஆகாவறிவதனை யகத்திவமுகறிலாய்
வாருபெறவாக்கிதைத்தவள்ளல் முஹியித்தீன்காண் 100

வானத்தரும் பூவ்வரும் வரிலைசயன் பியாமாரும்
சீனத்துள்ளோர் களரிதனிற் சூழ்ந்தமுகாய் நிற்பார்கள் 101

சிங்காசனமிறுத்திச் சீர்கொள்துகில்தாம் விரித்துச்
சங்கையாய் மக்ரிபத்தைச் சாற்றுமுஹியித்தீன்காண் 102

ஹக்குத் தஆலாவும் அக்காகத்தோற்றுச்செய்வான்
மக்கத்தகுமகரும் வருவார்களரிதனில் 103

அபூபக்கரு முமரு மண்ணாலு துமானலியும்
ஹபீபுகபியைபொதிந்து கனமாய்வருவார்கள் 104

காபுமலையிலுள்ள கருணையொலிமார்களெல்லாம்
லாபமிகுதிபெற நயினார்பக்கலில் வருவார் 105

காற்பதுசப்பாய்பறந்து நல்லநபியோர்பக்கல்
கூர்ப்பாகச்செய்குறையைக் கொண்டாடி கேட்பார்காண் 106

மறைவான வொலிமார்கள் வந்துசப்பாநிற்பார்கள்
முறைமுறையாயொலிமார்கள் மின்ளெளிபோனிற்பார்கள் 107

வானவவும்வாயமுகும் வல்லகித்திர்போலமுகும்
சீனத்தாய் நின்றிலங்கச் செய்குமார்கண்டாரே 108

அவுலியாயெல்லோரு மாதியொளிகளரிதனில்
மவுலானுவென்று செப்பி வாயமர்த்தி நிற்பாரே 109

வெண்ணிமிகுதியுள்ள வீருனபேரெல்லாரும்
மண்ணினம்போலே வளைந்தவர்கணிற்பாரே 110

சேர்ந்தகளரிதனிற் ஷெய்குமா ரெல்லோரும்
தாழ்ந்தங்கடிபணிவார் சங்கையுடை யோனருளால் 111

காணூறுமைக்கலயம் நல்லநயினாரளவிற்
சீனத்துள்ளசொல்லெழுதச் சிறப்பாகவந்திருக்கும் 112

எழுபதல்பாயிரம்பே ரெங்கணயினாரிடத்திற்
களிகூர்ந்து சொற்கேட்கக் கனமாகநிற்பாரே 113

ஆயிறளவுமுள்ள வவுலியாதோண்மீதில்
சாகாண்பரிமானுன் ருளென்றசுல்தான் காண் 114

அக்களரிதன்னிலுள்ள வவுலியாவெல்லோரும்
கக்காத்தோட்கொடுத்த கருணையுள்ள மீருன்காண் 115

வெண்ணில்யுள்ளபேர்களெல்லாம் வீருகத்தோட்கொடுத்து
கண்ணில்வைத் தொத்துவரே கர்த்தா வருளாலே 116

அழுத்தமுள்ளோர்கால் தனக் கதபாய்க்களங்கொடுக்கார்
துளித்தகருமத்திழந்து துக்கமிகப்பட்டனர்காண் 117

சேகுசுலைமான்றோளிற் சொற்பனத்திற்சிலருலமா
ஜாருடையோர் தாளிருக்கச் சக்கறவேகண்டவர்காண் 118

இபுனுவறபிய்யு மெங்கள் சுல்தான் மீறானுக்கு
அவனுடை யோனருளாலே யடிபணிந்து தோள்கொடுத்தார் 119

களரிதனிற்கைலவியுங் கனதிபகாவுதுமானும்
மூலரியத்தென்பவரு முறமையுடனடிபணிந்தார் 120

எல்லாவொலிமாரு மிவருடைய கலறத்திலே
அல்லாவருட்படியே யாதாவாய்வருவாரே 121

சேகுடைய கைபிடித்துத் தீன்வழியில்வந்தவர்கள்
வாகுபெறமிகுதியுண்டு வாயாற்றொலைக்கரிது 122

ஈசாநபியருளா லெமணிலுள்ளநசுறானி
கூசாமற்கைபிடித்துக் கூபானதீனில் வந்தார் 123

ஆகாயந்தன்னிலுள்ள அழகானபறவையெல்லாம்
மோகமுடனிவருகையை முயலாகக்கேட்டு நிற்கும் 124

இபுனு அறபிய்யு மிவருடைய பக்கலிலே
தவனமுடன் மஃரிபத்தைச் சங்கையாற் கேட்பவர்காண் 125

கருபாவைச்சுற்றியபோல் கருணையொலிமதுரசத்தை
உகப்பாய்த்தவாபு செய்யு மோசையுள்ள செய்கிறவர்காண் 126

துப்பவொலி தலைப்பாகை சுற்றவிழ்ந்த போதலிமார்
கையாற்றலைப்பாகை கழற்றியெறிந்தாரே 127

கனதிமுடிராசாக்கள் கனமாகச்சூழ்ந்து நின்று
தினமாகவேலைசெய்யும் செய்குசுல்தான் மீறான்காண் 128

ராசாக்கள் மந்திரிமார் நல்லநயினாரைக்கண்டால்
ராசாளி தன்னைக்கண்டகாரை போலவரே 129

அஹ்மதென்னுமவர்க்கு முஹம்மதுர்றஸூல்நயினார்
தகுமான செய்குனக்குச் சங்கையப்துல்காதிறென்றார் 130

தும்மி அல்ஹம்துசொன்னார் துய்யகுதுபாப்பள்ளியில்
உம்மலைபோற்றொனியாக விருந்தோர் சவாபுசொன்னார் 131

கீர்த்தியென்னுஞ்செய்கும் கிம்மத்துள்ளகைலவியும்
ஏத்திப்புகழ்வார்க ளிவர்கீர்த்தியெப்போதும் 132

தாஜுத்தீனென்பவர்தான் சங்கையொலிவந்த பின்பு
பேசாமற்குரிசிவிட்டுப் புவிமீதிறங்கினர்காண் 133

இருக்குமிடத்தி லெழுவானமும்மறுசும்
தரிக்கும் புவிக்கீழ் தவுரிஷபங்கண்டவர்காண் 134

சிதுறத்தெனும்மாமுக் கிரையெழுபதாலபும்
குதறத் தென்னுஞ்சமூகங் குறியுடனே கண்டவர்காண் 135



மனதினுன்னுங்கரும மெல்லாம் வாகாய் வெளியாக்கக்
கனதியுடனறிந்திருக்குங் காவலுள்ள மீறான்காண் 136

ராசாக்கள்பக்கல் நபிபோர்கத்துவந்தால்
ஆசாரஞ்செய்தவர்க ளாசரித்து முத்திக்கொள்வார் 137

ராசாக்கள் எல்லாம் நயினாரிடத்தில்வந்து
கூசாமல்வேலைசெய்யுங் கோஜா முஹியித்தீன்காண் 138

அவர்க்குக்குடைபிடிப்பா ரவுலியாவெல்லோரும்
அவட்கையுடனகவடி யலிகீர்த்திதொட்டு நிற்பார் 139

முத்துக்குடையு முழுமாணிக்கக்குடையும்
கொத்துகுடையுமுள்ள கோஜாமுஹியித்தீன் காண் 140

கரிபோற்பரியேறிக் கனமாய் வருகையிலே
பரிதிநிலமென்று செப்பும் பாராமுஹியித்தீன்காண் 141

பொழுதுசலாமுரைக்கும் பெருமான யினார்க்குப்
பழுதறவேயெல்லோரும் பாதம்பணிவார்காண் 142

மஞ்சுகுடையாகவந்த வள்ளல் நபிகிளையில்
கொஞ்சுகிளியாகவந்த கோஜாமுஹியித்தீன்காண் 143

கண்டபுதுமைகளைக் கவலவந்த பேர்களுக்கு
வெண்றியுடன் முன்கவனும் வீறுடைய மீறான்காண் 144

வரிசையருமதரும் வள்ளலவியாரும்
உரிசையுமினீரை யூட்டிவித்தஷெய்கிவர்காண் 145

உத்தாரமன்றி யுரமாயெழுந்தோரை
வித்தாரமாய் நெகிழ விலக்கிவிட்டமீறான்காண் 146

மானின் பிணையாக வந்தவள்ளல் நபியுடைய
தீனைஹயாத்தாக்குவித்த ஷேகுசுல்தான் மீறான்காண் 147

வானவர்க்கும் பூதலர்க்கும் மற்றுமுள்ள ஜின்களுக்கும்
நான் செய்கெனவுரைத்த நல்லவொலியானவர்காண் 148

துனியா இவராளவிற் றோகையர்போல் வந்தபின்பு
சனியான துனியாவைத் தள்ளிப்போவென்றவர்காண் 149

இபுலீசெனுஞ் செயித்தா னிவரிடத்தில் வேலைசெய்ய
தவனமாய்வந்தளவிற் றள்ளிப்போ வென்றவர்காண் 150

எழுபத்துச்சினைச் செயலை யெங்கணயினார்மாற்றி
ஈனமுள்ளவெளகுதனி னித்திரையிலாக்கு வித்தோர் 151

சிங்காசனத்திலிருந்து சீனத்துனவகுலுரைப்பார்
சங்கையுள்ளகளரியெல்லாம் தரையதிர அழுவாரே 152

சாலிகெனுமவர்க்குச் சங்கையுள்ளசுகுபாவை
மேலாகக்கட்டிவைத்த வீறானமீறான்காண் 153

மூக்குச்சிந்தல் காறல்கக்கல் மொய்க்குமீயமலில் விழத்
தாக்குடனே யில்லையென்று சங்கையுள்ளோர் செப்பினர்காண் 154

ஹல்லாஜைக்கழிவில்வைக்கும் காலந்தனிலனிருந்தால்
கொல்லாமற்கைபிடித்துக் கொண்டொளிப்பேனென்றவர்காண் 155
வதனங்கண்ட பேர்களுக்கு மண்கபுரில்வேதனைக
ளிதமுடனேயில்லையென்ற வெங்கள் முஹியித்தீன்காண் 156
பிறகாலேதொழுதவர்க்கும் பிரிசமுடன்களரிதனி
லறிவுகேட்கவந்தவர்க்கு மதாபகலுமென்றவர்காண் 157
கண்டவர்க்குங்கண்டவர்க்கும் கண்டவரைக்கண்டவர்க்கும்
வென்றியுடன்துபாவென்று வீறுகச்செப்பினர்காண் 158
நபிவைத்தெடுத்தடியில் நான்வைப்பேனென்றுரைத்தோர்
புவிவான் கடல் மலைகள் புகழ்ச்சிசெய்யும் புண்ணியர்காண் 159
சித்தீக்காம்பேர்களுக்குச் சுலதானிவரெனவே
புத்தியுள்ளகலிறுநபி புகன்றவப்துல்காதிறுகாண் 160
என்னுடைய புத்திரன்மா ரெல்லாம் தவ்பாவில்
மின்னத்துடை யோனருளால் மேவுமவுத்தாவரென்றூர் 161
எல்லா வொலிமாரு மென்கொடிக்கீழொதுங்குவார்க
ணல்லார் நபிகொடிக்கீழ் நானுவேனென்றுரைத்தார் 162
புத்திக்கடங்காப் பொருளுனெனவுரைத்தோர்
வெற்றிமிகுந்த வெங்கள் மேலான ஷெய்கிவர்காண் 163
அணங்கான சேடியர்க்கு மழகாம்பிறைபோல
துனுங்காமலிருட்டறையிற்றுலங்கி நிற்கக் கொடுத்தனர்காண் 164
நபியுல்லாசொற்படியே நான்குபெண்செய்கு கொண்டார்
புவிவிளங்கும்பிள்ளைகளைப் பெரியோனிவர்க்களித்தான் 165
ஷேக்குவப்துல்றஸ்ஸாக்குஞ் ஷெய்குவப்துல் வஹ்ஹாபும
வர்குடைய ஈசாவும் வள்ளலெஹியாவும் 166
ஷேகுவப்துல்ஜப்பாறும் ஷெய்குஇப்றுஹீமும்
ஜாகுமுஹம்மதருஞ் சங்கையவுலா திவர்காண் 167
றபீவுல் ஆகிறுமாதமெங்கணயினர்ஷெய்கு
புவியிலொடுங்கினர்காண் பிறைபோலதனுடனே 168
தொண்ணூறொருவயது துனியாவிலேயிருந்தார்
மண்ணூர்யெனும்பதியின் மணமாகவுள்ளமைந்தார் 169
பகுதாதென்னும்பதியில் வரிசையுள்ளநக்கயினர்
மவுனமுடன் மவுத்தானர் வல்லோனருளாலே 170
இந்தமீருன்மாலை யினிதாகக்கேட்பவர்க்கும்
அந்தமுடன்படிப்பவர்க்கும் மாதிறஹ்மத்தாமீன் 171
காமீல்நபியுடைய கருணைமிகவுண்டாக
ஆமீனு மீனுமீ னல்லா வுதவிசெய்வான் 172

மீருன் மாலை முற்றிற்று.

---

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இது
திருநெல்வேலி ஜில்லா, பொட்டல்புதூரடுத்த
கிருஷ்ணபுரம்,
ஹஜரத் ஜயிலானி பக்கீர் லெப்பை ஆலிம்
ஸாஹிபவர்கள் பாடிய

# நாகைமணி மாலை

## காப்பு.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூவினில் வாசம் போலப் பொருந்தியோர் புகழா யெங்கு
மேவியே நிறைந்த சோதி வேதநன் னபிதம் போர்
காவல ரினிய ஷாஹுல் ஹமீது நாயகத்தின் மீதி
லாவலாய் மாலை பாட ஆதியே துணைசெய் வாயே. 1

கார்வளர் சிறப்பு மேவுங் கனகமா ணிக்கப் பூரிற்
பேர்வளர் ஹசன்குத் தூசின் பெருந்தவத் துதித்தவள்ளல்
சீர்வளர் குதுபா மேன்மை ஷெய்கப்துல் காதிர் மீதி
லேர்வளர் மாலை பாட விறையவா துணைசெய் வாயே. 2

பொன்னுல கனைத்தும் போற்றும் புகழிற சூவி னோடு
மன்னிய கிளைஞர் தோழர் மகிமைசே ரனைவர் மீதும்
நன்னய ஸலவாத் தோதி நாயகர் பதத்தை நாளு
மென்னிரு தயத்தி னுடி யியம்பினேன் மாலை மாதோ. 3

## நூன் முகம்.

இறையவ னுண்மைத் தூத ரியல்திரு நபிதஞ் செல்வி
நறைகமழ் பாத்தி மாநன் னயகி முதிய சேயின்
முறைவழி முஹ்யித் தீன்றம் முற்பொருள் மரபிற் றோன்றி
மறைவளர் நாகை வாழு மதிபதி கவ்தென் பீரே. 4

மருமலி நளின வாவி மாணிக்கப் பூரிற் கள்வர்
வருமிடற் றவிர்ப்ப வன்னை வயிற்றிருந் துலகில் வந்து
பொருதடல் வெற்றி கொண்டு புகழ்ந்திட ஜயங்கள் யாருந்
தெரிதாகக் காட்டும் வள்ளல் ஸெய்யிதே கவ்தென் பீரே. 5

கழலுடனருஷிர் சென்றே ஹக்குடன் பேசிவந்த
வெளினபீ மார்க்கத் தன்னை யெங்கினும் விளக்கஞ் செய்ய
வழிகொடு முலகிற் றோன்றிய யதிஜய மிகவே காட்டும்
பொழில் வளர் நாகை வாழும் புரவலர் கவ்தென் பீரே. 6

கல்வியிர் கவிழ்ந்த பாகைத் தோன்றனு வனையே நுந்த
நல்வியற் கரத்தால் வாரி நல்குவீ ரெனக்கென் றோதச்
சொல்லுரை கொடுத்த வண்ணஞ் சுகிதரக் கொடுப்ப வாங்கி
யொல்லையிற் பருகும் வள்ள லுயர்புகழ் கவ்தென் பீரே. 7

வருமொரு தினத்தின் மேலோன் வல்லமை வசனங்கேட்டு
குருமுஹம் மதுகவ் தென்னுங் குவாலிய ரிடத்திற் சென்றே
யருள் பெறும் கிலாபத் தோடு மைரத்னக் கித்தாபும் பெற்று
பொருள்வளர் நாகை வாழும் புண்ணிய கவ்தென் பீரே. 8

மகிமையும் புகழு மோங்கு முஹம்மது கவ்துக் குற்ற
மகளிரை யெமது கோவே மணஞ்செய்வீ ரென்று தாதி
மகிழ்வோடும் வந்து சொல்ல மலர்க்கர முயர்த்திச் சொர்க்க
மகளிரைக் காட்டி வைத்த வள்ளலே கவ்தென் பீரே. 9

தந்தையர் ஹசன்குத்தூசுதயவுட னுமக்கன் பாகக்
கந்தனன் வதுவைக் கென்றே காவண மலங்கரிப்ப
வெந்திடச் சினத்தழலா னீற்றி விழியினிற் றோற்று தாக்குஞ்
சுந்தரப் புயத்தீர் மேன்மைத் தோன்றவே கவ்தென் பீரே. 10

அணிநகர் லாஹூர் தன்னி லறிவுறு நாறுத் தீன்வந்
திணையடி யிறைஞ்சி மக்க ளெழிற்பலன் பெறவே கேட்பத்
தனிவறும் புகழார் வாயின் றம்பலத் தெச்சில் நல்கிப்
புணர்வுறு மகவி னாக்கம் பொருந்தச்செய் கவ்தென் பீரே. 11

நெடும்பிணி வருத்த முற்று நீங்கிடா தயர்ச்சி யுற்றுக்
கடமுறும் கமியன் வந்து கழலிணைக் காத்தாற் பற்றிப்
படிமிசை கிடந்து வாழ்த்தப் பார்த்துந் திருக்க ணோக்கி
யுடலுறும் புண்கணீக்கு முயர்புகழ்கவ் தென் பீரே. 12

நல்வினற் சமைத்த புத்துக் கயத்துறு நீரை யுண்ணச்
சொல்லுரை கொடுத்தீ ருங்கள் சொற்படி குடித்த பின்ன
ரில்லதிற் சொரியென் றேவ வியலுடன் சொரியக் கண்டோர்
நல்லவர் புகழ்ந்து போற்ற நாகைவாழ் கவ்தென் பீரே. 13

வள்ளலுஞ் சமூக முன்னர் வாதுகூறிடுஞ்சன்யாசி
விள்ளருந் தடத்தின் மூங்கி மிதவையைச் சமைத்துக்கொண்டு
தெள்ளுற வருவே னென்று செலத்தினுட் சென்ற போதங்
கெள்ளலுற் றவனுட் டுஞ்ச வியற்றிடும் கவ்தென் பீரே. 14



காத்தினைப் பதத்தி லிட்டுக் காவல னுதவ வள்ளல்
கருத்தினா லுணவு கொள்ளக் கடுமடை யளித்தேன் வீயக்
காத்தினைப் பழித்த தாளிற் களமறுத் திறைஞ்சிக் கேட்ப
காத்தினுக் கதிபனாவி வழங்கிடும் கவ்தென் பீரே. 15

தன்னுயிர் மீண்ட மன்னன் றளந்தனை நிந்த மோடு
துன்னமுற் றமருக் கேவத் தொடர்ந்திடு வானி தத்தஞ்
சென்னிறக் குறிகி யோடச் செகுத்திடச் செய்த பின்ன
ரென்னலர் இடறை மாற்று மொண்ணலர் கவ்தென் பீரே. 16

மக்கமா நகரிற் சென்று மகிழுமேற் ஹஜ்ஜி னோடு
மிக்குறும் மதீன மெய்தி யெழில்ஸியா றத்துஞ் செய்து
மூக்கிய மான பைத்துல் முகத்திஸுக் கேகி யங்குள்
ஹக்கனைப் பணிந்த அப்துல் காதிறே கவ்தென் பீரே. 17

மாதவ ரொடுபொன் னானி வாழ்மகு தூமுக் குற்ற
போதுறும் பொழி லெய்திப் புண்யநீ ரிருந்த காலை
யேதமுற் றுலர்ந்த குச்சி யெழுந்திலை தளிர்த்துக் காய்ந்த
போதனை கண்டி யாரும் புகழ்ந்தநன் கவ்தென் பீரே. 18

ஓரூருத் துள்ள வன்னோ னுவந்தொரு நந்திக் காக
வேருறும் பதத்தி னண்ணி யிறைஞ்சிநும் பாலிற் கேட்ப
வாரமுற் றிடப மொன்றை மகிழ்ந்ததி ஜயத்தி னல்கிச்
சீருடன் வாழ்கச் செய்த செம்மலே கவ்தென் பீரே. 19

இலாங்கலி யுணங்கிக் காய்பற் றிங்கையால் வருமை யுற்றோ
னிலாவொளிர் பதத்தில் வந்து நெறியொடு புகழ்ந்து கேட்பப்
பலாவல னதினுண் டாகப் பாக்கிய மவன்பெற் றோங்க
விலாயத்தா லுதவி செய்த வேந்தரே கவ்தென் பீரே. 20

வங்கமும் வாழ்வு நீங்கி வறுமையிற் றொருவன் வந்து
பங்கயப் பதத்திற் றுய்ந்து பாக்கியம் பெறவே கேட்ப
அங்ககத் தகன்றோர் கண்ட மதையம்பி யாக்கி நல்கிப்
பொங்கியே செல்வ மோங்கப் பொருந்திய கவ்தென் பீரே. 21

புள்ளிமான் றோல்கள் கொண்டு போகுந்தே சிகர்தம் பாலிற்
றெள்ளுமா தவர்கள் கூடிச் சென்றதைப் பறித்துக் கொள்ள
வள்ளலெம் மிறையே யென்று வணிகர்வந் துரைப்ப வன்னோர்
கொள்ளுமவ் விலையைத் தாளா னுகவிடும் கவ்தென் பீரே. 22

ஜெயமுறு நத்ஹ றென்னுந் திறலொலி மறுகத் தெய்தி
நயமுறக் கலந்து பேசி நல்லமுதருந்தக் கண்ட
வியலுறுங் காத்தி மூக்காங் கினியபாக் களித்தன் னோரைத்
தயவுறும் வலிய தாக்கும் ஸாஹிபே கவ்தென் பீரே. 23

தஞ்சைமா நகர்க்கு வேந்தன் றனக்குறும் பிணியால் வாடிக்
கஞ்சமென் பதத்திற் றுய்ந்து கருத்துடன் புகழ்ந்து கேட்ப
வின்சொல்லால் மு அவ்வி தத்திரண்டினை யோதி யோதித்
துஞ்சறத் துன்பம் போக்குந் துய்யசீர் கவ்தென் பீரே. 24

மன்னபி கலிறி னோடு மாமணிக் கூட மெய்தி
சொன்னநற் கிண்ணச் சாந்தைத் தோய்த்தொலி மார்கள் கைக்கும்
பின்னமிற சேணதாக்கப் பிதாமகர் கைக்குங் கிழா
யுண்ணியங் கடித்த வள்ள லொண்புகழ் கவ்தென் பீரே. 25

செம்மலே தருணச் சேரி சென்றங்க னுள்ளோர்க் கெல்லாஞ்
செம்மைநன் னவத்தைக் காட்டித் திருநபி தீனி லாக்கிச்
செம்மலி னருளா லன்னோர் தெரிசனைக் கடங்கிப் பின்னர்
செம்மலர்த் தடஞ்சூழ் நாகை சேர்ந்திடும கவ்தென் பீரே. 26

தெரிவையின் கொங்கை தன்னைச் சிலந்தியென் றுவத்தி லெண்ணி
வருமொரு வருத்த மின்றி மறைபடச் செய்து பின்னர்
மறுகிவந் திறைஞ்சிக் கேட்ப மறுத்ததை மீட்டி விட்ட
குரிசிலே குதுபே யார்க்குங் குருமணி கவ்தென் பீரே. 27

உலகினில் வறுமை யென்னு முறுபிணி யதனாலேதுங்
கலியொடு வருந்துத் துன்பக் கஷ்டங்க ணீக்கி யன்பாய்
மலிவுறு நன்மை மேன்மை மகிமையு மிரண வாழ்வு
நலமுறந் தந்து காப்பீர் நாகைவாழ் கவ்தென் பீரே. 28

சீதவொண் கவிகை னீழற் றிருநபி பேரான
மாதவர்க் கரசே செங்கோல் மன்னவர்க் கரசே யோதும்
வேதியர்க் கரசேவாய்ந்த விண்டரு நாணயங்கொள்ள
வாதுவர்க் கருளுங்கையி னுண்டகை கவ்தென் பீரே. 29

மாத றமலான் றன்னில் வன்மையுற் றனைதம் பாலிற்
போதமாய்ப் பகலிற் பீரைப் புசித்திடா திருந்த வள்ளல்
சோதிசேர் முஹியித் தீன்றஞ் சுடர்மணிப் பேரரே சீர்
நீதியார் நாகை வாழும் நிருபரே கவ்தென் பீரே. 30

தாயுரை தவறு துண்மை தருமொழி யதனாற் கள்ளர்
நேயமுற் றறிந்தன் பாகி நெறித்தவ்பாச் செய்யச் செய்த
நாயகர் முஹ்யித் தீன்றம் நயமுறும் பேர ரான
பாயிகுல் அவ்லி யாவே யார்புகழ் கவ்தென் பீரே. 31

காற்றோடு சேணஞ் சிந்திக் கடுதினிற் புவியில் வீழச்
சேர்த்ததை நிவர்ந்து செல்லச் செயமுறப் பொருத்தி விட்ட
பார்த்திபர் முஹ்யித் தீன்றம் பண்புறும் பேர ரான
நேத்திரமணியே வள்ளல் நிமலரே கவ்தென் பீரே. 32



வாரண வென்பைத் தானோர் வஞ்சியின் மகனுக் காகப்
பூரண வுடலோ டாவி பொருந்திய கூவச் செய்த
காரண முஹ்யித் தீன்றங் கருணையுற் றுதித்த பேரா
ஆரணக் குரிசிலான ஆரிபே கவ்தென் பீரே. 33

வரிதனி லம்பி யோடு மாய்ந்திடு மொருவன் றன்னை
யருமையுற் றம்பியோடு மவனுயிர் மீட்டி விட்ட
பெருமையார் முஹ்யித் தீன்றம் பேரரா யுதித்த வள்ளல்
திருவளர் மலர்ப்பொற் பாதத் தேவரீர் கவ்தென் பீரே. 34

வானிழிக் கிஸறு யீலும் வந்தொரு மனுடன் றாஹைக்
கோனுரைப் படிகொண் டேகக் கோபமுற் றதனை மீட்டும்
மானமார் முஹியித் தீன்றம் மனமகிழ் பேர ரான
மேனிவர் செல்வ நாகை மீதுறும் கவ்தென் பீரே. 35

ஹம்மாது செய்கின் கையிற் கபுறினுண் மூடங்கண்டன்பாய்
நன்மையா னிறையோன் பாலினயமுறுந் துஆ விரந்தே
செம்மையா யிருத்தல் செய்த திரல்முஹ் யித்தீன் பேரா
செம்மல்ஷா ஹுல்ஹ மீதே திருப்புகழ் கவ்தென் பீரே. 36

தம்மிடத் தெகினத் தாலே தகைமை யார் வலியுல் லாதம்
வெம்மைசே ருழுவை தன்னை விரைவினிற் றுஞ்சச் செய்த
செம்மலார் முஹ்யித் தீன்றந் திருமணிப்பேர ரான
வம்மறை யொலிக்கு நாகைக் கரசரே கவ்தென் பீரே. 37

முஹ்யித்தீ னென்ற நாம முஹம்மது நபிதந்தீனிஞ்
செகமதி னுரைப்ப மேன்மைச் சிறப்புறு மப்துல் காதிர்
மகிழ்வுறும் பேர ரான வள்ளலு யகமே யென்ற
னகமுறுஞ் சலிப்பை மாற்றி யருள்செய்வீர் கவ்தென் பீரே. 38

கவ்துனல் அஃலை மென்றே கொற்றவன் கூறு நாமம்
புவியின்மீ தீந்த மேன்மைப் புரவலர் முஹ்யித் தீன்றம்
நவமுறும் பேர ரான நவமணிச்சுடரே யென்றன்
கவலைதீர்த் தருளைச் செய்வீர் ஹமீதெனும் கவ்தென் பீரே. 39

கடலிடை யோடு நவ்விக் கவிழ்ந்தருங் கணத்தி லன்னோன்
றிடமுடன் குதுபே யென்று சிந்தையுண் ணினைத்த போது
கடுதினிற் கருணை பூத்தே காத்துறும் புழக்கத் தாலே
யிடறினைத் தவிர்தல் செய்த வேந்தலே கவ்தென் பீரே. 40

ஆற்றிடாப் பசிவந் துற்ற வரியமா தவர்கள் கூடி
யேற்றினை யறுத்துத் தின்ற வென்பொடு தோலு மற்றுஞ்
சேர்ந்ததைத் தனுவோ டாவி சேர்ந்திடச் செய்த கோவே
நாற்றிசை புகழு நாகை நரபதி கவ்தென் பீரே. 41

சிரகத்தைத் திருடிச் சென்ற தேசிகர் நவங்கண் டஞ்சிச்
சரணத்திற் றொழுது போற்றத் தயவுடன் தீனி லாக்கிக்
கரகத்தை யானோர்க் கீந்து கல்வியின் முறையுங் காட்டி
பாமுற்ற பேர்களாகப் படுத்திடும் கவ்தென் பீரே. 42

அன்னையி னகட்டுட் சேர்த்தே யமைத்துரு வாக்கி யன்பாய்ப்
பின்னுமிப் புவியி லாக்கிப் பேணியே வளர்த்தில் காளு
மன்னவ னருள்கொண் டோங்கு மாதவத் தொலிமா ரெல்லாம்
நண்ணய முடனே போற்ற நாகைவாழ் கவ்தென் பீரே. 43

மானிலப் பைங்கூழ்க் கெல்லாம் வான்முகில் வளங்கல் போல
மானிடர் வாட்டந் தீர வருமுகி லென்ன வந்து
மானிதி நாகை வாழு மகத்துவ வள்ள லேயீ
மானக மருள்வீர் வண்மை மகிபரே கவ்தென் பீரே. 44

ஆதிதன் றூழ ரான அஹமது நபிக்கு மன்னோர்
நீதிசே ரால்க ளுக்கு நெறியுள்ள அசுஹா பிக்கும்
கோதறும் ஸலவாத் தோதி ஹூம்மெனு மிலக்க மட்டி
லோதிய மாலைமுற்று முடையவனருளா லாமீன். 45

நாகைமணி மாலை முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras.


அஸ்ஸலாத் என்னும்

# தொழுகை

(படங்களுடன்)

இக்காலை நம் பாமர முஸ்லிம் சகோதரர்களில் பலர், அரபு (உர்தூ) ஓதத் தெரியாத காரணத்தினால் கலிமா, ஈமான், இஸ்லாம், தொழுகை முதலிய முக்கிய விஷயங் கூட தெரியாமல் இருக்கின்றனர். அநேகர், தொழுகையில் நின்று என்ன செய்வது, என்ன ஓதுவது என்று தெரியாமல் திகைக்கின்றனர்.

அப்படிப் பட்டவர்களின் நன்மைக்காகவே, இந்நூல் சுத்தத் தமிழில் எளிய நடையில் புரியும் வண்ணம், ஜனாப் மவ்லவி, டி. எப். ஆர். மஹ்லவி ஸாஹிப் (பாகவி) அவர்களைக் கொண்டு இயற்றச் செய்து, ஆங்காங்கு அரபு விளக்குகளும் தொழுகைப் படங்களும் சேர்க்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கிறது.

இந்நூல் கைவசம் இருந்தால் ஈமான், இஸ்லாம் முதலிய விபரங்களையும், சுயமே தொழுது கொள்ளும் விவரத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

மற்றும் தொழுகையில் ஓதும் நிய்யத்துகள், ஸூறாக்கள், துஆக்கள், ஓதல்கள் யாவும் அறபியில் போட்டு அதன் கீழ் தமிழில் உச்சரிப்பும் பொருளும் போடப்பட்டிருக்கின்றன.

இன்னும், இந்நூலில் உளூவு, முழுக்கு, தயம்மும், ஜனாஸா தொழுகை, ஜும்ஆ தொழுகை, பெருநாள் தொழுகை, ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு முதலிய விவரங்களும் அடங்கி இருக்கின்றன.

கடைசியில் தமிழிலும், அறபியிலும் ஸூறாக்களும், தொழுகை நேர அட்டவணையும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஷாபி கிதாபு ஹதியா ரூ. 3–60
ஹனபி கிதாபு ஹதியா ரூ. 3–60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 10. மைஹரோட், திருவல்லிக்கேணி, சென்னை 5.